நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 37,38 ஜனவரி 14-27, 1994 விலை 10/=

**போரே வழியென்றீர்!**

வீடெலாஞ் சாவீடாய் வீதியெலாஞ் சுடுகாடாய்
நாடெலாம் போர்க்களமாய் நாறிடினும் -பாடறியீர்
போரே வழியென்றீர்! பின்னருமேன்; புதைகுழியாம் ஐயோ
பாரங்கே எனுமுந்தப் பகட்டு:

- ஈழமோகம்

# எம்பிலிப்பிட்டியவில் எலும்புக் கூடுகள் புதைகுழிகளிலிருந்து மீட்பு!

எம்பிலிப்பிட்டிய மத்திய மகாவித்தியாலயத்தில் காணாமல் போன மாணவர்களது சடலங்கள் சூரியகந்தைப் பகுதியில் உள்ள புதை குழியொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சியினருக்குக் கிடைத்த ரகசிய தகவலொன்றின் பேரில் சூரியகந்தையிலுள்ள குறித்த இடத்தை அகழ்ந்ததில் இதுவரை 21க்கு மேற்பட்ட சிதைந்த நிலையிலிருந்த மண்டையோடுகளும், எலும்புக் கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

மண்டை ஓடுகளுடனும், எலும்புக் கூடுகளுடனும் இருந்த சிதைவடைந்த சாறம், சேட் போன்றவற்றைக் கொண்டு பெற்றோர் தத்தமது பிள்ளைகளது சடலங்களே இவை என அடையாளம் காட்டியுள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது.

எம்பிலிப்பிட்டிய மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து 1989ம் அண்டு காணாமல் போன மாணவர்களது சடலங்கள் அண்மையில் சூரியகந்தை என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இந்த மாணவர்கள் கொல்லப்பட்டு கருதப்படும் எலும்புக் கூடுகளும் கண்டு பிடிக்கப்பட்டன.

இதனை அடுத்து எம்பிலிப்பிட்டிய நீதவான், மற்றும் வழக்கறிஞர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், பிரமுகர்கள் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டு மீண்டும் எட்டாம் திகதி தோண்டப்பட்



தன் பிள்ளைகளை எலும்புச் சாக்குகளில் தேடும் பரிதாபக் காட்சி

டதில் மேலும் மண்டையோடுகளும் எலும்புக் கூடுகளும் கிடைத்துள்ளன.

இதற்கிடையில் இச் சம்பவம் பற்றிய செய்திகளை வெளியிட்ட பத்திரிசைகள் மிரட்டல்களுக்கு உள்ளானதுடன் புலனாய்வு விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். அதே போல் இச் சம்பவத்தை வெளிக் கொணர்வதில் தொடர்புடைய அரசியல் தலைவர்களும் மிரட்டல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

லேக் ஹவுஸ் பத்திரிகைகளோ இவை ஜே.வி.பீயினரால் கொல்லப்பட்ட சடலங்கள் என்றும் இவை எம்பிலிப்பிட்டிய மாணவர்களுடையவை என்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்றும் வெளியிட்டு வருகின்றன.

இச் சம்பவத்தைப் பற்றிய வழக்கை நடாத்தும் வழக்கறிஞர் எஸ்.ஏ.பிரேமரத்ன என்பவருக்கு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எட்டாம் திகதி சூரியகந்தையில் குழி தோண்டும் நடவடிக்கைகளை தொடரச் சென்றிருந்த போது போகும் வழிகளில் குறிப்பாக மாதம்பே பகுதிகளில் வேறு மயானங்களில் இருந்து தோண்டிக் கொணடு வரப்பட்டிருந்த பிணங்

புதைககப்பட்ட இடம் பற்றிய விபரங்களும், வரைபடமும் ரகசியத் தகவல் ஒன்றின் மூலம் எதிர்க் கட்சியினருக்குக் கிடைத்ததை அடுத்து ஜனவரி மூன்றாம் திகதி எதிர்க்கட்சியினரும், பத்திரிகையாளர்களும் குறித்த இடத்திற்குச் சென்று நிலத்தைத் தோண்டியதில் சடலங்கள் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து பல மண்டையோடுகளும், எலும்புகளும் கிடைத்துள்ளன. அன்றைய தினத்தில் மொத்தம் 12 மண்டையோடுகளும் 20சடலங்களுக்குரியவை எனக்

——>2

கடலில் மீனவர் கொலை:

## கொல்லப்பட்டது மீனவர்களல்ல புலிகள் எனத் திரிக்கின்றன கொழும்புப் பத்திரிகைகள்

பருத்தித் துறைக்கும் வெற்றிலைக் கேணிக்கும் இடையிலான கடற் பிராந்தியத்தில் கடற்படையினரின் மிருகத்தனமான தாக்குதலினால் ஒன்பது மீனவர்கள் கடந்த வாரம் கொல்லப்பட்டனர். அவர்களின் மூன்று படகுகள் துவசம் செய்யப்பட்டன. இவர்கள் யாவரும் குடத்தனை, குடா அடைப்பு பகுதிகளைச் சேர்ந்த ஏழை மீனவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் யாழ்ப்பாணம் சென்று வந்த டொச் பத்திரிகையாளரான ஹூம் போறச் இச் செய்தியினை ஊர்ஜிதப்படுத்தியுள்ளார். கொல்லப்பட்ட இந்த ஒன்பது மீனவர்களது மரணச் சடங்கிலும் தான் கலந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த ஒன்பது மீனவர்கள் கொல்லப்பட்ட செய்தியை அரச சார்புப் பத்திரிகைகளான டெயிலி நியூஸ், தினகரன் என்பனவும், உபாலி நிறுவனப் பத்திரிகைகளான திவயின, தி ஐலண்ட் என்பனவும் கடற்படையினர் எட்டுக் கடற்புலிகளைக் கொன்றுள்ளதாகவும், அவர்களது மூன்று அதிவேகப் படகுகளை அழித்துள்ளதாகவும் திரித்து வெளியிட்டுள்ளன.

மாத்தையா, யோகி உட்பட புலிகள் இயக்கத்தைச் சேர்நத நால்வர் இடை நிறுத்தி வைக்கப்பட்டதாக டொச் பத்திரிகையாளர் கூறிய செய்தியை முக்கியத்துவம் கொடுத்து முதற் பக்கத்தில் வெளியிட்ட இப் பத்திரிகைகள், அவரே தெரிவித்த ஒன்பது மீனவர் கொல்லப்பட்டது தொடர்பான செய்தியை இருட்டடிப்புச் செய்து விட்டது மட்டுமல்லாமல், கொல்லப்பட்டவர்கள் புலிகள் என்று திரித்தும் விட்டதானது இப் பத்திரிகைகளின் உள்நோக்கத்தை சிறுபான்மை மக்கள் தொடர்பான அவர்களது கண்ணோட்டத்தை அம்பலமாக்குகிறது.

## தாண்டிக்குளத்தை தேங்காய் எண்ணெயுடன் தாண்ட படையினர் தடை

தாண்டிக்குளத்திற்கப்பால் தேங்காய் எண்ணெய் கொண்டு செல்ல படையினர் தடை விதித்திருக்கிறார்கள். இது தவிரத் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக வடபகுதிக்கான போக்குவரத்து வவுனியாவுக்கப்பால் சீர்குலைந்துள்ளது. இதன் காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளது.

ஒரு தேங்காய் 27 ரூபாவுக்கும், கற்களாலும் குறுனல்களாலும் நிரப்பப்பட்ட அரிசி 19 ரூபாவுக்கும், நல்ல அரிசி கிலோ 35 ரூபாவுக்கும், பாண் ஒரு றாத்தல் 8 ரூபாவுக்கும் விற்கப்படுகின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் காலை பல் விளக்காமல் பாண் கியூவுக்குச் சென்றது போன்

——>11

இவ்விதழுடன் சிறப்பிதழையும் கலண்டரையும் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விலை ரூபா பத்து மட்டுமே.

நன்றி - நூலகத்திட்டம்



## யாழ் பல்கலைக் கழகத்திற்கு

## மாணவர் அனுமதி குறைப்பால்

# புலிகளின் புதிய மருத்துவக் கல்லூரி உதயம்

புலிகள் தமது பூரண கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தில் தனியார் மருத்துவக் கல்லூரி ஒன்றை ஆரம்பித்துள்ளதாகவும் இக் கல்லூரியில் மருத்துவப் படிப்புக்காக முதற்கட்டமாக 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

மிகச் சிறந்த பெறுபேறுகளுடன் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்களில் இருந்தே இம் மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான விரிவுரைகள் யாவும் துறை தேர்ந்த மருத்துவ நிபுணர்களால் நடாத்தப்படுகின்றது எனவும் ஓய்வு பெற்ற மருத்துவ விரிவுரையாளர்களது சேவையும் புலிகளால் பெறப்படுவதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

நான்கு வருடக் கற்கை நெறியான இம் மருத்துவத்துறையில் சித்திபெறும் மாணவர்களுக்கு M.B.B.S பட்டம் வழங்கப்பட்டு வடக்கின் வைத்தியசாலைகளில் சேவைக்காக சேர்க்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டுக்கான பல்கலைக் கழக அனுமதியில் யாழ் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையே பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு வெட்டுப் புள்ளியைக் காரணம் காட்டி குறைத்ததும், யாழ். பல்கலைக்கழகமும், பல்வேறு பொதுஸ்தாபனங்களும் யுத்த சூழ்நிலையைக் காரணம் காட்டி யாழ். பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியைக் குறைக்கும்படி கேட்டிருந்தும் அரசு இது பற்றி அலட்டிக் கொள்ளாமல் இருந்ததும் புலிகளின் தனியார் மருத்துவக் கல்லூரி அமைக்கும் முயற்சிக்குத் தூண்டுகோலாக இருந்ததாகவும் பேசப்படுகிறது.

இதே போல் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் கேட்டிருந்த மாணவர் தொகையை விட குறைந்த மாணவர் தொகையையே மட்டு. பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்ள பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அனுமதித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. ●

## மட்டக்களப்பு மாநகர சபை:

## நிர்வாகத்தின் அக்கறையின்மையும்

## பதில் ஊழியர்

# பதவி பறிபோகும் நிலையும்

சுமார் பத்துவருடங்களுக்கு மேலாகப் பதவியில் இருந்த ஆணையாளர் யாவரும் கீழ்நிலை உத்தியோகத்தவர்களின் வெற்றிடங்களுக்குத் தற்காலிக நியமனங்களே வழங்கி வந்துள்ளனர். அதாவது இவர்களின் நியமனக் கடிதங்களில் ''பதில் ஊழியர்கள்'' என்ற சொற்பிரயோகம் குறிப்பிடப்பட்டிருந்தது. இவர்கள் யாவரும் மட்டக்களப்பையும் அதனை அண்டிய கிராமங்களையும் சேர்ந்த ஏழைத் தொழிலாளர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் என நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்தும், அதற்காக மாநகரசபையின் பிரதான உயர்நிலை உத்தியோகத்தர்களில் இருந்து மாகாண சபையின் அதிகாரிகள் வரை இரந்து வேண்டியும் பலன் எதுவும் கிடைக்கவில்லை. கூடவே இவ்வூழியர்களின் துயர்நிலையை உணரவோ அல்லது உயர்மட்டங்களுக்கு இப்பிரச்சினையை எடுத்துச் செல்லவோ மாநகர சபையும் இல்லை அதிகாரிகளும் இல்லை. பதிலாக இறுகிய மனப்பான்மை கொண்ட அதிகாரிகளே உள்ளனர் என ஊழியர்கள் அங்காலாய்க்கின்றனர்.

ஆனால் மத்திய அரசினதும் விஷேசமாக ஜனாதிபதியினதும் கட்டளைகளின் பேரில் அரச கூட்டுத்தாபன உள்ளூராட்சி நிர்வாகங்களுக்கு, பதில் ஊழியர்களின் நிரந்தரமாக்கும் சுற்று நிருபங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இது நாட்டில் உள்ள அனைத்து அரச கூட்டுத்தாபன உள்ளூராட்சி அமைப்புகளுக்கும் பொருந்தும்.

எனினும் நாட்டின் மற்றைய பகுதிகளின் தற்காலிக ஊழியர்களின் பதவிகள் நிரந்தமாக்கப்பட்ட போதிலும் கூட மட்டக்களப்பு மாநகரசபை ஊழியர்களின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இப்பதவி பறிபோதல் தொடர்பாக உயர் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு ஊழியர்களினால் கேள்வி எழுப்பப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் சபையில் நிதியில்லை வெற்றிடம் இல்லை என்ற முரண்பாடான காரணங்களைக் காட்டி தட்டிக் கழிப்பதாக கூறப்படுகின்றது. ஆயினும் இங்குள்ள கீழ்நிலை ஊழியர்களின் வெற்றிடங்கள் யாவும் 1960ம் ஆண்டுக்குரியவை என்பது குறிப்பிடத்தக்கது.

தமக்கு மட்டும் ஏன் இந்த நிலை எனக் கேள்வி எழுப்புகிறார்கள் இவர்கள் ●

# 'வெல்லப்பட முடியாத யுத்தத்தை நிறுத்துங்கள்'

## -ந.ச.ச.கட்சி பிரமுகர் திருநாவுக்கரசு

இன்று வடகிழக்கில் நடைபெறும் யுத்தம் ஏலவே பத்தாயிரக் கணக்கான உயிர்களைப் பலிகொண்டு விட்டதென்பது உலகறிந்த விடயம் கூடவே பெருந்தொகையினோர் ஊனமாக்கப்பட்டுள்ளதுடன் ஏராளமான சொத்துக்களும் அழிக்கப்பட்டுள்ளன. மேலும் வடக்கு கிழக்கிற்கான அத்தியாவசியப் பொருட்களின் விநியோகமானது (உணவு, எரிபொருள், மருந்து) ஏறத்தாழ ஒரு பொருளாதாரத்தடை என்ற அளவுக்கு அழுத்தம் பெற்றுள்ளதுடன், தொடர்ச்சியாகவே கணக்கில் அளவிட முடியாத விமானக்குண்டுத் தாக்குதல்களும், பீரங்கித் தாக்குதல்களும் 1990 யூன்மாதத்தின் பின்னர் தீவிரமாக நடாத்தப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக பலமட்டங்களிலும் பல சந்தர்ப்பங்களில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. நான் கூட அவ்வப்போது இதுபற்றி கேள்வி எழுப்பியுள்ளேன் என்பதுடன் உணவு, சுகாதாரம், பாதுகாப்பு, வடகிழக்கு புனர்வாழ்வு ஆகியவற்றுக்கான அமைச்சுக்களின் இணைப்புக் குழுக் கூட்டங்களில் கடந்த மூன்று மாதங்களாக குரல் எழுப்பி வருகின்றேன். 93-12-12ம் திகதிய இறுதிக் கூட்டத்திலும் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளேன். எனினும் மிக அண்மையிலும் பலவிமானக் குண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

(1) யாழ்நகர் பரி.யோவான் தேவாலயம் தாக்கப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டதுடன் 16 பேர் உயிர் இழந்துள்ளனர்.

(2) யாழ் செயலகம் அழிக்கப்பட்டு யாழ் அரச அதிபர் திரு மாணிக்கவாசகரும் காயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக அரச உயர் மட்டத்துடன் தொடர்பு கொண்டு கூறிய இரண்டே நாட்களில் யாழ்மாநகர எல்லையினுள் பாஷையூர், குருநகர், சின்னக்கடை ஆகிய பகுதிகள் தாக்கப்பட்டு ஒரு கர்ப்பிணித் தாய் உட்பட இரண்டு பிள்ளைகள் கொல்லப்பட்டு 71 பேர் காயமடைந்தனர். மேலும் பேக்கரி, 8கடைகள் 11வீடுகள் அழிக்கப்ப்ட்டன.

(3) கீழ்வரும் விடயங்களும் குறிப்பிட்ட திகதிகளில் அல்லது அதனை அண்டிய திகதிகளில் இடம்பெற்றுள்ளன.

93-12-6ம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் கனகாம்பிகை, வட்டக்கச்சி பகுதித் தாக்குதல் விபரங்கள் இதுவரை அறியப்படவில்லை. இதே திகதியில் யாழ்.வைத்தியசாலை ஷெல் வீச்சினால் தாக்கப்பட்டு சிவானந்தன் என்ற வைத்தியர் உட்பட இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

வைத்திய சாலைக்கு 50யார் தூரத்தில் உள்ள கூட்டுறவுக் கடை ஒன்று சுப்பர் சொனிக்கினால் அழிக்கப்பட்ட சம்பவத்தில் வைத்தியசாலை ஜன்னல்கள் சிதறி கட்டில்களில் படுத்திருந்த நோயாளிகள் அதிர்வினால் தூக்கி வீசப்பட்டனர். இதே காலப்பகுதியில் நடந்த பிறிதொரு தாக்குதல் சம்பவத்தில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியும் அழிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களுக்குள் ஆவரங்கால், மானிப்பாய், கோண்டாவில், பருத்தித்துறை, பொன்னாலை ஆகிய பிரதேசங்களிலும் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்று பலவீடுகள் சேதமடைந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு நடைபெறும் சுப்பசொனிக், புக்கார தாக்குல்களினால் உயிருடன் இருப்பவர்கள் கூட அணுஅணுவாக இறந்து கொண்டிருக்கின்றனர் எனவும் பலர் மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் புள்ளிவிபரவியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்தகாலங்கள் 95ற்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் மட்டும் அழிக்கப்பட்டுள்ளன. அதனால் மக்கள் விமான ஷெல்தாக்குதல்களின் போது ஆலயங்களில் கூட தஞ்சம் அடைய முடியாத நிலையே நிலவுகின்றன. (அமைச்சர் தேவராஜாவின் கூற்றுப்படி)

எனினும் கூட இவையாவற்றையும் பாதுகாப்பு அதிகாரிகள் மறுத்து வந்துள்ளனர். ஆனால் இப்பகுதிகளில் நடாத்தப்படும் தாக்குதல்கள் நூறுவீதமானவை சிவிலியன்கள் மீதானதே என்பதை மறுக்கமுடியாது.

மேலும் இந்தத் தாக்குதல்களின் விளைவாகவும் மின்சாரமின்மை, மண்ணெண்ணைப் பற்றாக்குறை என்பனவும் மாணவர்களின் பரீட்சைகளைக் கடுமையாகப் பாதித்துள்ளதுடன் கல்வித்தரம் மிகவும் தாழ்நிலையை அடைந்துள்ளது.

இந்தவகையில் கடந்தகால நிகழ்கால அரசாங்கங்களினது தவறுகளின் விளைவே எல்.ரீ.ரீ.ஈ என்பதை தங்களுக்கு கூறவிரும்புவதோடு, இது ஒரு வெல்லப்படமுடியாத யுத்தம் என அரசியல்வாதிகளும், அறிவாற்றல் உள்ளவர்களும், ராணுவ ஆய்வாளர்களும் தெரிவித்துள்ளனர். இதனை முன்னாள் இராணுவத் தளபதியும் பின்னைநாள் வடகிழக்கு கவர்னருமான லெப்-ஜெனரெல் சிறில் ரணதுங்கவே தனது சேவை முடிவில் தெரிவித்துள்ளார். இதனையே டென்சில் கொப்பேகடுவவும் குறிப்பிட்டு இப் பிரச்சினைக்கு அரசியல் அணுகுமுறை அவசியம் என்றார். இறுதியாக இராணுவத் தளபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்ற சிசில் வைத்தியரட்னவும் "தோற்கும் இராணுவத்தின் தளபதியாக இருக்க நான் விரும்பவில்லை'' எனக் குறிப்பிட்டு சென்றுள்ளார்.

எனவே இந்தப் பயனற்ற யுத்தத்தை நிறுத்தி உடனடியாகப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் இல்லாவிடின் பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் முயற்சிகளை எடுத்து வருகின்றது என செய்யப்படும் பிரச்சாரம் சர்வதேச சமூகத்தையும் அந்நிய நிதி நிறுவனங்களையும் பிழையாக வழிநடத்துவதாகவே அமையும் என நவசமசமாஜக் கட்சியின் அரசியல் பீட உறுப்பினர் வீ.திருநாவுக்கரசு 93.12.16ம் திகதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவுத்துள்ளார். ●

## எம்பிலிப்பிட்டிய...

கள் பாதை நெடுகிலும் போடப்பட்டிருந்தன.

சூரியகந்தை மலையிலும் சம்பந்தப்பட்ட குழிகளில் வேறு எலும்புக் கூடுகள் சாரங்கள் என்பன போடப்பட்டிருந்தன. இவ் வழக்கை திசை திருப்புவதற்காகவும்கடந்த கால பாசிசச் செயல்களை மூடி மறைப்பதற்காகவும் மேற்கொள்ளப்படும் செயல் இது என பலர் கருத்து தெரிவித்தார்கள்.

எட்டாம் திகதி சடலங்கள் கிடைக்கும் குழி உள்ள பகுதிக்கு பெற்றோர்கள் உட்பட பொதுமக்கள் அனுமதிக்கப்படவில்லை. பத்திரிகையாளர்கள், காவல்துறை, நீதித்துறையினர் மற்றும் அரசியல் தலைவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அன்றைய தினத்திலும் ஒன்பது எலும்புக் கூடுகளும் இன்னும் உருகிய சதைகளுடன் கூடிய எலும்புகளும் கிடைத்தன.

மேற்படி தினததில் மாலை வரை தோண்டியபோதும் தொடர்ந்தும் சடலங்கள் கிடைத்துக் கொண்டிருந்தமையால் சடலங்கள் தேடும் நடவடிக்கை மற்றும் இச் சம்பவம் தொடர்பான புலன் விசாரணையை தொடர்ந்து நடத்துமாறு குற்றப் புலனாய்வுப் பணியகத்துக்கு பணிக்கப்பட்டது. அத்துடன் பெற்றோர் பார்வைக்காக பத்தாம் திகதி எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் குழிகளில் இருந்து கிடைத்தவற்றை பார்வைக்கு வைக்கப்படும் என்றும் நீதவான் அறிவித்தார்.

பத்தாம் திகதி கண்டெடுக்கப்பட்ட சாரம், பிளாஸ்டிக் பல் பொருத்திய மண்டையோடுகள் என்பவற்றைக் கொண்டு நான்கு பெற்றோர்களால் தங்களது பிள்ளைகள்தான் என அடையாளம் காட்டப்பட்டது.

இச் சம்பவத்தைப் பற்றி விசாரிக்க ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு பலரால் அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளதையும், அரசு சார்புப் பத்திரிகைகள் எந்தவிதமான விசாரணையும் முடியும் முன்பே, இந்த எலும்புக் கூடுகள் எம்பிலிப்பிட்டிய மாணவர்களது அல்ல என்றும், ஜே.வி.பியினரால் கொல்லப்பட்டவர்களது சடலங்களே இவை என்று முந்திக் கொண்டு அறிவிப்பதுவும் அரசு தொடர்பான சந்தேகங்களை அதிகரிக்க வைக்கிறது.

இந்த மாணவர்கள் இறுதியாகப் பொலிஸார்; அனேகமானோர் இராணுவத்தினராலும் கொண்டு செல்லப்பட்டவர்களாதலால் இவர்கள் இராணுவத்தினராலேயே கொல்லப்பட்டிருக்கிறார்கள் எனப் பேசப்படுகிறது.

1989காலப் பகுதியானது ஜே.வி.பியினரது ஆதிக்கம் நிறைந்த காலப்பகுதி என்ற படியால் அப்போது பல ஆயிரக் கணக்கான அப்பாவி இளைஞர்கள் சந்தேகத்தின் பெயரில் அரசினால் கொல்லப்பட்டது நினைவில் கொள்ளத்தக்கது. ●

## செஞ்சிலுவைச் சங்கத்திடம் படையினர் ஒருவர் ஒப்படைப்பு

அண்மையில் நடந்த பூநகரி, நாகதேவன்துறைத் தாக்குதலின் போது புலிகளால் சிறைபிடிக்கப்பட்ட படையினரில் ஒருவரை யாழ்ப்பாணம் I.C.R.C. வதிவிடப் பிரதிநிதியிடம் ஒப்படைத்துள்ளனர். அவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர் கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த லயன்ஸ் கோப்ரல் லலித் குணரட்ன (25வயது) எனவும், இவர் கஜபாகு ரெஜிமென்டைச் சேர்ந்தவர் என்பதும் தெரிய வந்துள்ளது. கடுமையான நோயினால் பாதிக்கப்பட்ட லலித் குணரட்னவை புலித் தளபதிகளில் ஒருவரான கரிகாலன் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடம் கடந்த வாரம் ஒப்படைத்துள்ளார். ●

நன்றி - நூலகத்திட்டம்

# விமலேசுக்காக அழ ஒரு தேசம் ராஜினிக்காக அழ ஒரு உலகம் மாத்தயாவுக்காக அழ ....?

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதித்தலைவர் மாத்தயாவுக்கு புலிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்டு விட்டதாகச் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பிந்திக் கிடைத்த செய்தியொன்று இத்தண்டனை ஜனவரி 16ம் திகதி நிறைவேற்றப்படும் என்றும் தெரிவிக்கின்றது. ஊர்ஜிதமற்ற இச் செய்தி, புலிகளின் இம் முடிவு அவர்களின் உத்தியோக பூர்வமுடிவா என்பதுபற்றியோ அல்லது இத்தண்டனை எவ்வாறு நிறைவேற்றப் படுமென்பது பற்றியோ எதுவும் தெரிவிக்கவில்லை. எவ்வாறாயினும், மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும், இம்மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்பாக அதை நியாயப்படுத்துவதற்கேற்ற வகையில் மாத்தயா மீதான பல குற்றச்சாட்டுக்கள் செவிவழிச் செய்திகளாகப் பரவ அனுமதிக்கப்பட்டுள்ளன என்றும் வடக்கிலிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இந்திய அரசின் உளவுப்படையான றோவுடன் தொடர்பு வைத்திருந்தார் என்றும், இத்தொடர்புகள் மூலம், இந்திய அரசுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பான தகவல்களை வழங்கி வந்தார் என்றும், முன்னாள் யாழ் பிராந்திய தளபதியாக இருந்த கிட்டுவின் கொலைக்குக் காரணமான இந்தியப் படையினரின் நடவடிக்கைகளுக்கு இவர் கொடுத்த தகவல்களே க... மாயிருந்தன என்றும் வடக்கில், குறிப்பாக பாழ்ப்பாணத்தில் இப்போது கதைகள் பரவத் தொடங்கியுள்ளன. புலிகளுக்கு எதிராகவோ புலிகளின் உறுப்பினர்களுக்கு எதிராகவோ இத்தகைய செய்திகள் பரவுவதை ஒரு போதும் அனுமதிக்காத புலிகள், இப்போது மாத்தயாவுக்கு எதிராகப் பரப்பப்பட்டு வரும் செய்திகள் குறித்து மௌனமாக இருப்பது அப்படிமான செய்திகள் பரவுவதை அவர்கள் விரும்புகிறார்கள் என்பதையே காட்டுகிறது என்று கருத இடமுண்டு. சரியாகச் சொல்வதானால், இச்செய்திகளுக்கான மூலம் புலிகளாகவே இருக்க வேண்டும். புலிகளின் பிரதித்தலைவர் மாத்தயாவுக்கெதிராக, புலிகளைத் தவிர வேறு யாருக்குத்தான் இத்தகைய செய்திகளைப் பரப்பும் துணிவு - அதுவும் யாழ்ப்பாணத்தில் பரப்பும் துணிவு இருக்கமுடியும்?

இப்போது மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள மாத்தயா என்கிற மகேந்திர ராஜாவிற்கும் புலிகளின் தலைவருக்கும் இடையில் முரண்பாடு வெடித்துள்ளதாக கடந்த 1990 யூன் யுத்த ஆரம்பத்தின் போதே சில பத்திரிகைகள் எழுதியிருந்தன. மாத்தயாவால் உருவாக்கப்பட்ட 'விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி' என்ற அரசியல் கட்சியின் செயற்பாடு முடக்கப்பட்டதும், பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த போதே திடீரென யுத்தம் வெடித்ததும், மாத்தயாவின் கையிலிருந்த அதிகாரங்களை பிரபாகரன் முழுதாக தனது கைகளில் எடுத்துக் கொண்டதன் விளைவுகளே என்று அப்போது பேசப்பட்டது. அதன் பின்னான கடந்த மூன்றரை ஆண்டுகளாக மாத்தயாவின் குரலை யாருமே கேட்க முடியவில்லை. அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்ற செய்திகள் பின்னர் அடிபட்டன. ஆயினும் அப்போதெல்லாம் இப்போது பேசப்படுவது போன்ற குற்றச்சாட்டுகள் மாத்தயா மீது காட்டப்பட்டதில்லை. இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பிரபாகரனுக்கு இருந்த சந்தேகங்களை பிரபாகரன் தொடர்ந்து வெளிப்படுத்தி வந்ததாகவும் மாத்தயாவின் அரசியல் கட்சி அமைத்தல், பேச்சுவார்த்தை நடாத்தல் போன்றவற்றைப் பிரபாகரன் தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வந்ததாகவும் பிரபாகரனால் வழங்கப்பட்டிருந்த கால அவகாசத்துள் பேச்சுவார்த்தை மூலமாக எதையாவது செய்யலாம் என்ற விடயத்தை மாத்தயாவால் நிரூபிக்க முடியவில்லை என்றும் இதனாலேயே பிரபாகரன் தனது பொறுப்பில் அனைத்து விடயங்களையும் கையேற்றுக் கொண்டு விட்டார் என்றும் செய்திகள் வெளிவந்தன. ஆனால் இப்போது அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்களோ மிகப் பாரிய குற்றங்களாகவும் என்றென்றைக்கும் மாத்தயாவின்



பெயருக்கு களங்கம் கற்பிப்பவையாகவும் அமைகின்றன.!

தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாற்றில் உள்முரண்பாடுகள் ஆயுதமுனையில் தீர்க்கப்பட்டமைக்குப் பல உதாரணங்கள் உண்டு. ஆயினும் பெரும்பாலானவை 'வீரமரணம்', 'தியாகம்' என்ற மகுடங்களுக்குக் கீழேயே நிறைவேற்றப்பட்டு வந்துள்ளன. முழு அளவில் பிரபல்யம் பெற்ற பிரபாகரனுக்கு அடுத்தவர் என்று பேசப்பட்ட ஒரு முக்கியஸ்தர் ஒருவர் இப்போதுதான் முதன் முறையாக 'துரோகி' என்ற முத்திரையின் கீழ் 'தண்டிக்கப்பட' உள்ளார். இதற்கு முன்பும் இவ்வாறு ஒரு சிலர் தண்டிக்கப்பட்டுள்ள போதும், அவர்களில் யாரும் மாத்தயா அளவுக்குப் புகழ் பெற்றவர்களோ, மாத்தயா அளவுக்கு முக்கிய பொறுப்பில் இருந்தவர்களோ அல்ல. கடந்த பத்தாண்டுகட்கும் மேலாகப் புலிகள் இயக்கத்தின் மிகவும் சக்திவாய்ந்த ஒருவராகவும் ஏன் அதன் உயிர் நாடி என்று சொல்லக் கூடிய அளவிற்கு முக்கியமானவராகவும் இருந்த மாத்தயாவின் வரலாறு இவ்வாறு முடியக் கூடும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. ஏன் அவரே கூட எதிர்பார்த்திருக்கப் போவதில்லை.

போசமறிப்பின்

ஆனால் வரலாறு எதிர்பார்த்திருந்திருக்கிறது போலும் -பிரபாகரனின் வடிவில்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ வரலாற்றில் மாத்தயாவுக்கு மறுக்க முடியாத ஒரு இடம் உண்டு. 1983இலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக இயக்கத்தைக் கட்டி எழுப்பியதில் மற்றெவருக்கும் குறையாத பங்கு மாத்தயாவுக்கு உண்டு. வன்னிப் பிரதேசத்தின் தளபதியாக இருந்த காலத்தில் மாத்தயா புலிகள் இயக்கத்தை ஒரு 'புலிகள்' இயக்கமாகக் கட்டி எழுப்புவதில் ஆற்றிய பங்கைப்பற்றி அப்போதெல்லாம் வியந்து பேசாத புலிகளை வடக்கில் காண முடியாது. மாற்று இயக்கங்களை வேரோடு கிள்ளி எறிவதில் அவர் எவ்வளவு நுணுக்கமாகச் செயற்பட்டார் என்பதனை புலிகள் அப்போதெல்லாம் பெருமையுடன் பேசிக் கொண்டார்கள். கிட்டுவின் காலும் போய் அவர் வெளியேறிய பின், முழு அளவில் இயக்கத்தை வழிநடாத்திச் சென்றவர் அவர் என்றும் அவரது சிறப்பான தலைமையின் கீழ்தான் புலிகளின் உளவு ஸ்தாபனம் பலமாக வளர்ந்தது என்றும் புலிகள் மெச்சிக் கொள்வதுண்டு.

இந்தியப்படை வந்திருந்த போதும் சரி, அதனுடன் மோதிய போதும் சரி பலாலி முகாமில் 'சைனைட்' அருந்திப் புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட பல புலி முக்கியஸ்தர்கள் இறந்த போதும் சரி (இப்போது அவர்களுக்கு சயனைட் வழங்கி சாகவைத்தவர் இவரே என்றும் பேச்சு அடிபடுகிறது) அவரது இராஜதந்திரம் வெகுவாகப் பாராட்டப்பட்டது. வடமராட்சி ஒப்பிரேசன் லிபரேசனின் போது பருத்தித்துறையை இராணுவம் நெருங்கிக் கொண்டிருக்கையில் துப்பாக்கிகளை ஒழுங்கைக்குள் போட்டு விட்டு புலிகள் ஓடினர் என்றும் அதைக் காப்பாற்ற மாத்தயா 'குறுப்' வந்ததாகவும் பேச்சுகள் அடிபட்டன.

இவ்வளவுடன் மாத்தயாவின் பணி நின்று விடவில்லை.

கொழும்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தும் வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைச் சுட்டு விட்டு பிறகு அவர்களைத் துரோகி எனப் பட்டம் சூட்டியதும், யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீட விரிவுரையாளர் ராஜினி திரணகம சுடப்பட்ட போது அவரையும் துரோகிகள் பட்டியலில் சேர்த்ததும், உதிரியாக இருந்த பல ஜனநாயக சக்திகளைத் துரோகிகள் என்ற பெயரில் பிடித்து வதைமுகாம்களுக்கு அனுப்பவோ, கொல்லவோ, உத்தரவுகளை வழங்கிய போதும் மாத்தயா புலிகளின் உண்மையான விசுவாசியாகவும், சிறந்த தேசபக்தனாகவும் தான் புகழப்பட்டார். யாழ் பல்கலைக் கழக மாணவனான விஜிதரன் கடத்திச் செல்லப்பட்டதை எதிர்த்து நடந்த பல்கலைக் கழக மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை தலைமையேற்று நடாத்திய மாணவன் விமலேஸ்வரன், அப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்து ஆற்றிய உரையின் போது தெளிவாகவே குறிப்பிட்டான்: ''இப் போராட்டம் விடுதலைப் போராட்டத்திற்கோ எந்த ஒரு விடுதலை இயக்கத்திற்கோ எதிரானது அல்ல. மாறாக இவ் விடுதலைப் போராட்டம் சரியாகவும் வெற்றிகரமாகவும் அமைவதற்கு அடிப்படையான ஜனநாயகத்திற்கானதாகும். விடுதலைப் போராட்டம், போராடும் மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்க வேண்டும் என்பதற்கானதாகும்... தேசத்தின் மீதும் அதன் விடுதலையின் மீதும் உள்ள விருப்பாலும் அக்கறையாலுமே நாம் இப் போராட்டத்தில் இறங்குகின்றோம்''.

ஆனால், அவன் புலிகளின் கண் முன்னே துரோகியானான்.

மரண தண்டனைக்குரிய குற்றவாளியாகிப் போனான்.


அப்போதெல்லாம் மாத்தயா ஒரு தேசபக்தனாக இருந்தார்.

அவனைத் துரோகி என்று எந்த இயக்கத்தின் சார்பில் அன்று மாத்தயா கூறினாரோ அந்த இயக்கத்திற்கே இன்று மாத்தயா துரோகியாய்ப் போனார் என்பது வரலாறு காட்டும் ஒரு அற்புதமான முரண்நகை.

வரலாறு எதையும் மறந்து விடுவதில்லை என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம்.

'ஒவ்வொரு அரசியற் தவறுகட்கும் இரத்தத்தால் பதில் சொல்ல வேண்டியிருக்கும்' என்றார் ஒரு அரசியல் மேதை.

புலிகள் இந்தியாவை சார்ந்து நின்றதற்காக எமது மக்கள் பின்னாளில் இரத்தத்தால் கொடுத்த விலை அளவற்றது.



தேசத்தின் ஜனநாயக சக்திகள் அவைனரையும் துரோகிகள் என்று கூறிச் சிறை வைத்தோ, கொன்றோ, நாட்டை விட்டு விரட்டியோ இல்லாதொழித்த போது, புலிகள் தமது சொந்த இருப்புக்கான ஜனநாயகத்தையும் சேர்த்தே விரட்டினார்கள்.

அதற்கான விலையை எமது மக்கள் 1990 யூனிலிருந்து இன்றுவரை செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஜனநாயகத்துக்காக குரல் எழுப்பிய நபர்களை, மாற்று அரசியற் கோட்பாட்டை நம்பியவர்களை துரோகிகள் என்று கூறி அதிகாரம் செலுத்திய மாத்தயா இன்று அதே காரணத்துக்காக தனது உயிரை விலையாகக் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

புலிகளால் இதுவரை மரண தண்டனை வழங்கப்பட்டோர் பட்டியலில் அதிகளவு பரிதாபகரமான பெயராக மாத்தயாவின் பெயர் அமைந்துவிடப் போகிறது.

அதிகளவுக்கு நியாயப்படுத்தப்படக் கூடிய ஒன்றாக அது ஆகிவிடப் போகிறது.

ஏனென்றால் மற்றவர்களைப் போலல்லாமல் மாத்தயா பற்றிய நல்ல செய்திகளை சொன்னவர்களும் அவர்களே. அவர்கள் சொன்ன நல்ல செய்திகளை நம்பிய உலகம், இன்றைய கசப்பான செய்திகளையும் நம்பத்தான் வேண்டியிருக்கிறது.

உண்மையான மாத்தயா யார் என்பதை மற்றெல்லோரையும் விட அவர்களே அதிகமாக அறிவர்.

ஒரு ராஜினியை, ஒரு விமலேஸ்வரனைப் போல மாத்தயா, மக்களால், அவர்களது மக்கள்சார்ந்த நடவடிக்கைகளால் அறியப்பட்டவர் அல்ல. புலிகளால் அறிவிக்கப்பட்டவரே!

மக்கள் மத்தியிலிருந்து வந்த மக்களின் மதிப்புப் பெற்ற சக்திகள் மீதான தீர்ப்பை எழுத புலிகளுக்கு அனுமதித்த எங்கள் தேசம், மாத்தயா பற்றிய தீர்ப்பை எழுத அவர்களுக்கு உரிமையை மறுக்க முடியுமா?

விமலேசுக்காக அழ தேசமும், ராஜினிக்காக அழ ஒரு உலகமும் இருந்தது.

மாத்தயாவுக்காக அழ அவரது மனைவி கூட இருப்பாரா என்பது தெரியவில்லை.

இது பெரிய விலை.

உலகில் வேறு யாரும் இதுவரை கொடுத்திராத பெரிய விலை.

இதை இன்னுமுள்ளவர்கள் எப்போதான் புரிந்து கொள்ளப் போகிறார்களோ?

நன்றி - நூலகத்திட்டம்



# 1994ம் ஆண்டை குடும்பத்திற்குரிய ஆண்டாக ஐ.நாடுகள் சபை பிரகடனப்படுத்தியது ஏன்?

## ஆசிய பசுபிக் பிராந்திய மட்டத்திலான பெண்கள் மகாநாட்டில் கேள்வி

**1994ம் ஆண்டை ஐக்கிய நாடுகள் சபை குடும்பத்திற்குரிய சர்வதேச ஆண்டாகப் (International year for the family) பிரகடனம் செய்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையினது இப் பிரகடனத்தின் பின்னணி என்ன? ஏன் குடும்பம் பற்றி இந் நிறுவனம் அக்கறை கொள்கின்றது? உண்மையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்ற மேலும் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் வேண்டி நிற்கும் விடயங்களிலேயே பொதுவாக ஐக்கிய நாடுகள் சபை அக்கறை செலுத்தும். குடும்ப அமைப்புக்கு தற்போது அச்சுறுத்தல் எழுந்துள்ளதா? ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தும் குடும்ப அமைப்பு எத்தகையது? ஆணைத் தலைவனாகக் கொண்ட தந்தை வழி ஓரலகுக் குடும்ப அமைப்பையே இத்தகைய நிறுவனங்கள் வலியுறுத்துகின்றன. பெண்கள் தொடர்பாக இப் பிரகடனம் எத்தகைய விளைவுகளைத் தரும்? போன்ற வினாக்கள் எழுப்பப்பட்டன. குறிப்பாக தென்னாசியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறை குடும்ப மட்டத்திலேயே நிலவும் போது குடும்ப ஆண்டுப்பிரகடனம் தொடர்பாகப் பெண்கள் அமைப்புகள் என்ன செய்யலாம் என்ற வினாவும் எழுந்தது. இது தொடர்பாக ஐக்கியநாடுகள் சபைக்கு பெண்கள் இயக்கங்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டது**

### சசிதேவி



நான்காவது உலகப் பெண்கள் மகாநாடு 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சீனாவில் பீகிங் நகரில் நடைபெற உள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவில் நடக்கவிருக்கும் இம் மகாநாட்டின் பொருள் ''சமத்துவம் அபிவிருத்தி, அமைதியை நோக்கிய செயற்பாடு'' (Action Towards Equality Development And Peace)என்பதாகும்.

இம் மகாநாட்டில் சர்வதேச நிறுவனங்கள், அரசுகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவை பெருந்தொகையாகக் கலந்து கொள்ளும். அரசசார்பற்ற நிறுவனங்களின் கருத்துகளும் அபிப்பிராயங்களும் சுதந்திரமானவையாக இருக்கக்க கூடும். ஆகையால் அவை பெண்களது உண்மையான பிரச்சினைகளையும் யதார்த்த நிலையையும் வெளிப்படுத்தக் கூடும்எனப் பலரும் கருதுகின்றனர். இம் மகாநாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கு பற்றலை அதிகரிப்பதற்காகப் பல முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் பிராந்திய மட்டங்களில் அரசசார்பற்ற பெண்கள் நிறுவனங்களின் தயாரிப்புக் கூட்டங்களும் நடைபெறுகின்றன.

இவ்வகையில் ஆசிய பசிபிக் பிராந்திய மட்டத்திலான மகாநாடு 1993 நவம்பர் 16 ஆம் திகதியிலிருந்து 20 ஆம் திகதிவரை பிலிப்பைன்ஸ், மணிலா நகரில் நடைபெற்றது. 'அபிவிருத்தியில் பெண்கள்' என்பது இந் மகாநாட்டின் பொருளாகும்.

ஆசிய பசிபிக் பிராந்தியத்திலிருந்து முப்பத்தைந்து நாடுகளைச் சேர்ந்த ஐந்நூறு அரசசார்பற்ற நிறுவனங்கள் இம் மகாநாட்டில் கலந்து கொண்டன. இவை பலவகையின; மிகச் சிறிய உள்ளூர் மட்டத்திலான ஹவாய் பெண்கள் கிளப் போன்றவை. தொழிற்சங்கத் தன்மை வாய்ந்த இந்தியாவைச் சேர்ந்த சேவா (SEWA)என அழைக்கப்படும் சுயதொழில் புரியும் பெண்கள் சங்கம் போன்றவை, தேசிய அபிவிருத்திக்கான பிலிப்பைன்ஸ் பெண்கள் செயல் நிறுவனம் போன்ற தேசிய மட்டத்திலான அமைப்புகள், சர்வதேச மட்டத்திலான பெண்களும் அபிவிருத்திக்குமான ஆசிய பசிபிக் பெண்கள் நிறுவனம் போன்றவை உதாரணங்களாகும். சுமார் 850 பிரதிநிதிகள் இங்கு வந்திருந்தனர் மகாநாட்டு நிகழ்ச்சிகளை அறிவிப்பதற்கு 36 செய்தியாளர்கள் (பெரும்பாலோர் பெண்கள்) வந்திருந்தனர். மகாநாடு நடைபெற்ற ஐந்து நாட்களும், இது நிகழ்ந்த ஹையாத் ஹொட்டல் பல்வேறு நிகழ்ச்சிகளினதும் விவாதங்களினதும் மையமாகத் திகழ்ந்தது. இலங்கையிலிருந்தும் பல்வேறு பெண்கள் அமைப்புகளைச் சேர்ந்த சுமார் பதினைந்து பெண்கள் கலந்து கொண்டனர். இம் மகாநாட்டில் காரசாரமாக விவாதிக்கப்பட்ட சில விடயங்கள், கவனிக்கப்படாது விடப்பட்ட அம்சங்கள், தென்னாசியப் பெண்கள் முக்கியமாக விவாதித்த சில கருத்துக்கள் என்பவை பற்றிய ஒரு தொகுப்பை இங்கு தருவதற்கு முயல்கிறேன்.

தென்னாசியாவிலிருந்து வந்தவற்றுள் பெரும்பான்மையாகக் காணப்பட்டவை இந்தியப் பெண்கள் அமைப்புகளே. சுமார் 90 இந்தியப் பெண்கள் வந்திருந்தனர். தென்னாசிய மட்டத்திலான உபபிராந்தியக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. காரசாரமான விவாதங்கள், கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. அடிப்படை வாதம், இனவாதம், இராணுவமயமாதல், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், உள்நாட்டுப் பகைமைகள், வன்செயல்கள்





காரணமாக ஏற்படும் அகதிநிலை போன்றவை தென்னாசியாவின் பெண்கள் எதிர் கொள்ளும் முக்கிய பிரச்சினைகள் என இனம் காணப்பட்டன தென்னாசியாவில் பலம்பெற்றுவரும் அடிப்படைவாதம், இனத்துவ முரண்பாடுகள் ஆகியவை பெண்களது அபிவிருத்திக்குத் தடையாக இருப்பதுடன், பெண்களுக்கு எதிரான வன்முறைக்குக் காரணமாகவும் அமைகின்றன என்ற கருத்தைப் பலரும் ஒரே குரலில் வற்புறுத்தினர். அத்துடன் குடும்பமட்டத்தில் பெண்களுக்கு எதிராக நிகழும் வன்முறை பற்றியும் அதிகளவு பேசப்பட்டது. இத்தகைய வன்முறைகள் தனிப்பட்டவையாகவும், குடும்ப விடயங்களாகவும் சமூகத்தாலும் அரசாலும் கருதப்படுகின்றன. இதனால் இவை பற்றி அரசோ, நீதித் துறையோ கவனம் கொள்வதில்லை. சமூக மட்டத்திலும், குடும்பங்களிலும் நிலவும் பெண்களுக்கு எதிரான வன்முறையை அகற்றுவதற்கான சட்டங்கள் இயற்ற வேண்டும் எனவும், இவ்விடயம் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் பரவலாக்க வேண்டும் எனவும் பெண்கள் அமைப்புகள் நீண்ட காலமாகச் செயற்பட்டு வருகின்றன. பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாக விவாதித்த போது இன்னோர் விடயமும் அதில் குறுக்கிட்டது.

1994ம் ஆண்டை ஐக்கிய நாடுகள் சபை குடும்பத்திற்குரிய சர்வதேச ஆண்டாகப் (International year for the family) பிரகடனம் செய்துள்ளது ஐக்கிய நாடுகள் சபையினது இப் பிரகடனத்தின் பின்னணி என்ன? ஏன் குடும்பம் பற்றி இந் நிறுவனம் அக்கறை கொள்கின்றது? உண்மையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்ற மேலும் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் வேண்டி நிற்கும் விடயங்களிலேயே பொதுவாக ஐக்கிய நாடுகள் சபை அக்கறை செலுத்தும். குடும்ப அமைப்புக்கு தற்போது அச்சுறுத்தல் எழுந்துள்ளதா? ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தும் குடும்ப அமைப்பு எத்தகையது? ஆணைத் தலைவனாகக் கொண்ட தந்தை வழி ஓரலகுக் குடும்ப அமைப்பையே இத்தகைய நிறுவனங்கள் வலியுறுத்துகின்றன. பெண்கள் தொடர்பாக இப் பிரகடனம் எத்தகைய விளைவுகளைத் தரும்? போன்ற வினாக்கள் எழுப்பப்பட்டன. குறிப்பாக தென்னாசியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறை குடும்ப மட்டத்திலேயே நிலவும் போது குடும்ப ஆண்டுப்பிரகடனம் தொடர்பாகப் பெண்கள் அமைப்புகள் என்ன செய்யலாம் என்ற வினாவும் எழுந்தது. இது தொடர்பாக ஐக்கியநாடுகள் சபைக்கு பெண்கள் இயக்கங்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

குடும்ப ஆண்டுப் பிரகடனத்தைப் பயன்படுத்தி 'குடும்பம்' என்ற அமைப்பைப் பெண்நிலை நோக்கிலிருந்து விமர்சனம் செய்யும் பல நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ய வேண்டும் என்ற குரலும் எழுந்தது. குடும்பம் என்பது தந்தைவழி, ஆணாதிக்க, ஓரலகுக் குடும்பம் மாத்திரம் அல்ல. அது வெவ்வேறு வகையில் இருக்கலாம். எனவே குடும்பம் என்ற கருத்தை மீள் வரைவிலக்கணப்படுத்த வேண்டும் எனவும் கூறப்பட்டது. தென்னாசியப் பெண்கள் மாத்திரமன்றி கிழக்காசியப் பெண்களும் இத்தகைய கருத்துக்களைப் பிரதிபலித்தனர்.

மணிலா மகாநாட்டின் முக்கிய அம்சமாகத் திகழ்ந்தவை 17ஆம் 18ஆம் திகதிகளில் நிகழ்ந்த 48 பயிற்சிப் பட்டறைகள் எனலாம். முக்கியமான கருத்துக்கள், கோரிக்கைகள் ஆகியவை இவற்றிலேயே உருப்பெற்றன. உடல்நலம், தொழில் உரிமைகள், விவசாயம், கலாசாரமும் கல்வியும், அரசியல் அதிகாரம் பெறல், பொருளாதார அதிகாரம் பெறல், பெண்களுக்கு எதிரான வன்முறை, பெண்களது மனித உரிமைகள், விஞ்ஞானமும் தொழிநுட்பமும், பூர்வீக குடிப்பெண்கள், குடும்பம், இயற்கைச் சூழல் என்ற பனிரெண்டு தலைப்புகளையும் நான்கு உபபிரிவுகளாக வகுத்து இந்த 48 பயிற்சிப்பட்டறைகளும் நடைபெற்றன. பெண்களது மனித உரிமைகள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஆகிய பயிற்சிப் பட்டறைகளிலேயே அதிகமானோர் பங்கேற்றனர். இது பெண்களுக்கு எதிரான வன்முறையின் பரிமாணத்தை எடுத்துக் காட்டியது.

இவ்விரு பயிற்சிப்பட்டறைகளிலும் அதிகம் விவாதிக்கப்பட்ட இன்னோர் விடயம் இரண்டாம் உலகப்போர் காலத்தில் ஜப்பானிய இராணுவத்தினரின் பாலியல் தேவைகளுக்குப் பலாத்காரமாகப் பயன்படுத்தப்பட்ட தென்கிழக்காசியப் பெண்கள் தொடர்பானதாகும். குறிப்பாக கொரியப் பெண்கள் தொடர்பானதாகும். குறிப்பாக கொரியப் பெண்கள் இராணுவ முகாம்களில் எப்படி இம்சிக்கப்பட்டார்கள் என்பதை நேரில் கேட்டபோது சமீப காலத்தில் இவ்விடயத்தை பத்திரிகையிலும், தொலைக்காட்சியிலும் செய்தியாகப் பார்ப்பதை விட, இக் கொடுமைகளின் பாதிப்பு நன்கு விளங்கியது. ஜப்பானிய அரசாங்கமே இதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டும் எனக் கூறப்பட்டது. இவ்வாறு இம்சிக்கப்பட்ட பெண்களில் உயிருடன் இருப்போருக்கும் இறந்தோரின் குடும்பங்களுக்கும் ஜப்பானிய அரசு நட்டஈடு வழங்க வேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது. ஏற்கனவே இவ்விடயம் தொடர்பாக தென்கிழக்காசிய மட்டத்திலான பெண்கள் அமைப்புகள் மேற்கொண்ட தீர்மானங்களை மேலும் வலியுறுத்துவது போலவே இம்மகாநாட்டுப் பயிற்சிப் பட்டறைகளில் கருத்துகள் கூறப்பட்டன.

தொழில் உரிமைகள், பொருளாதாரம், விவசாயம் முதலிய தலைப்புகளில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் முன்னுக்கு வந்த இன்னோர் கருத்து, சந்தைத் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி கொள்கைகள் பெண்கள் நலனுக்குப் பாதகமாக உள்ளன என்பதும் இவற்றுக்கு மாறாக, பொருத்தமான கொள்கைகளை உருவாக்க வேண்டும் என்பதுமாகும்.

சீனப் பெண்கள் அமைப்புகள் சிலவற்றின் பிரதிநிதிகள் தமது நாட்டை உதாரணம் காட்டி எவ்வாறு பெண்கள் சந்தைத் தேவை, லாபம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளால் பாதிக்கப்படுகின்றனர் என விளக்கினர்.

சில பெண்கள் அமைப்புகள் அரச சார்பற்றவை எனக் கூறிக் கொண்டாலும் அவை தத்தமது அரசுகளை விட்டுக் கொடுக்க முன் வரவில்லை. பெண்கள் தொடர்பாக பல முன்னேற்றமான நடவடிக்கைகளை தமது அரசாங்கங்கள் மேற்கொண்டன என இவை கூறின. இதற்குச் சிறந்த உதாரணம் அகில சீனப் பெண்கள் ஒன்றியம் ஆகும். முதலாம் நாள் ஆரம்பக் கூட்டத்தின் போது வெளியிட்ட உத்தியோகபூர்வமான அறிக்கையில் 85ஆம் ஆண்டிலிருந்து சீனாவில் பெண்கள் தொடர்பாக ஏற்பட்ட முன்னேற்றங்களை இவ்வறிக்கை அட்டவணைப்படுத்தியது. தொழில் செய்யும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, கல்வி முன்னேற்றம், அரசியல் பங்கு பற்றல் அதிகரிப்பு என இது நிரைப்படுத்தியது. எனினும் சீனப் பெண்கள் மேலும் முன்னேற்றம் அடையவேண்டிய நிலையிலேயே உள்ளனர் என ஒப்புக்கு ஒரு வசனம் சேர்க்கப்பட்டிருந்தது. பெண்கள் நிலை பற்றிய அரசின் நோக்கு நிலையில் அடிப்படை வினாக்களை எழுப்பத் தவறியமை பற்றிய இந்த அறிக்கையைச் சீனப் பெண்கள் சிலரே பகிரங்கமாகவும் கடுமையாகவும் விமர்சித்தனர்.

புதிய ஜப்பானிய பெண்கள் சங்கம் என்ற அமைப்பும் ஜப்பானிய பெண்களது யதார்த்த நிலைபற்றிய காரசாரமான விமர்சனம் ஒன்றை முன்வைத்தது. முக்கியமாக மூன்று விடயங்களை இச்சங்கத்தின் அறிக்கை மையமாகக் கொண்டிருந்தது.

1) பாலியல் அடிமைகளாக ஜப்பானிய இராணுவத்தால் பெண்கள் பயன்படுத்தப்பட்டமை.

2)அபிவிருத்தியடைந்த, முதலாளித்துவ ஜப்பானிய பெண்களின் ஒடுக்குமுறை யதார்த்தம்.

→ 11

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக மக்கள் எதிர் யூ.என்.பி? அல்லது தொண்டமான் எதிர் செல்லச்சாமியும் அந்த எட்டுப்பேரும்?

## எஸ். குமாரவேல்

வாக்குறுதி அளித்தபடி மலையக மக்களுக்கு லயன்களை சொந்தமாக்கவில்லை. காணிகள் வழங்கவில்லை. தனியார் கம்பனிகளின் அட்டூழியங்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே நான் எதிர்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். மத்தியமாகாண சபையில் யூ.என்.பிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு இ.தொ.கா உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவார்கள் என்று இ.தொ.கா. தலைவர் தொண்டமான் குறிப்பிட்டதனால் மலையக மக்கள் நலன் சார்ந்த அடிப்படையில் இ.தொ.கா.விற்கு மாறான கொள்கையைக் கொண்ட அமைப்புகள் கூட இ.தொ.கா. தலைவர் தொண்டமானின் யூ.என்.பி அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டை ஆதரித்தன.

கடந்த மாகாணசபை தேர்தல் காலகட்டத்தில் தோட்டங்களுக்குள் போகப் பயந்த தொண்டமான் லயன்களை சொந்தமாக்கித் தருவேன் என்ற கோரிக்கையை முன்வைத்து மலையக மக்கள் மத்தியில் இ.தொ.கா. மீதிருந்த அதிருப்தியை நீக்கியது மட்டுமன்றி, வேறுவழிவகைகளையும் கையாண்டு மாகாணசபை தேர்தலில் மத்திய ஊவா சப்பிரகமுவ மாகாணங்களில் யூ.என்.பிக்கு பெருமளவு வாக்குகளை பெற்றுக் கொடுத்து அதனை வெற்றிபெறச் செய்தார்.

ஆனால் லயன்களை சொந்தமாக்கிக் கொடுக்காதது மட்டுமன்றி, தனியார் கம்பனிகளின் கெடுபிடிகள், அடக்குமுறைகள் காரணமாக தொழிலாளர்களை பட்டினியில் தள்ளியது அரசாங்கம் இதன்காரணமாக மீண்டும் இ.தொ.கா. மீது அதிருப்தி மேவி சாதாரண தலைவர்கள் கூட மலையக மக்கள் முன் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் யூ.என்.பிக்கு எதிராக தொண்டமானின் அறிக்கைகள் மக்கள் மத்தியில் அவரின் சரிந்த செல்வாக்கு நிமிர்த்தப்பட அடிப்படையானது. இ.தொ.காவும் அதன் தலைவர் தொண்டமானும் மலையகத்தில் தொடர்ந்து நின்று பிடிக்க முடியுமா என்ற கேள்வியில் மாற்றத்தை கொண்டுவரும் போக்கிலேயே தொண்டமானின் யூ.என். பிக்கு எதிரான அறிக்கைகள் அமைந்தன.


தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்கான கோரிக்கையை முன்வைத்தும் அதனை அரசாங்கம் மறுத்துவிட்டதனால் மத்திய மாகாணசபையில் யூ.என்.பிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர காமினி திஸாநாயக்காவை தூண்டியதாக திரு.தொண்டமான் கூறினார். இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு, மத்திய மாகாண சபையிலுள்ள இ.தொ.கா உறுப்பினர்கள் யூ.என்.பி பட்டியலில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தாலும் ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என தொண்டமான் கேட்டுக் கொண்டார்.


மேற்படி விடயம் இ.தொ.கா வின் தேசிய சபையில் முடிவெடுக்கப்பட்டதாகவும் தொண்டமான் தெரிவித்திருந்தார். ஆனால் நம்பிக்கையில்லாப் பிரேரணை மத்திய மாகாணசபையில் விவாதத்திற்கு எடுக்கப்படுவதற்கு முன்னரேயே மத்திய மாகாண சபை இ.தொ.கா உறுப்பினர்களில் எட்டுப் பேர் இ.தொ.கா தலைமையின் முடிவுக்கு எதிராக கருத்துக்களை வெளியிடத் தொடங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இ.தொ.கா. யூ.என்.பி உறவை பேண தொண்டமானுடன் யூ.என்.பி மேவிடம் பேச்சுவார்த்தை நடத்திய அதே வேளை இ.தொ.கா மத்திய மாகாண சபை உறுப்பினர்களை யூ.என்.பிக்கு சார்பாக வைத்துக்கொள்ள யூ.என்.பி உறுப்பினர்களும், முதலமைச்சரும் மத்தியமாகாணசபை தலைவரும் யூ.என்.பி அமைச்சர்களும் எல்லாவகையிலும் முயற்சி செய்தனர்.

நவம்பர் மாதம் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கான முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட பிறகுதான் அவசர அவசரமாக மத்திய மாகாணசபை உறுப்பினர்களுக்கு உத்தியோக வாகனங்களை வழங்கவும், விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்று அறிய முடிகின்றது.

இ.தொ.கா உறுப்பினர்களை தனித்தனியாக யூ.என்.பி முக்கியஸ்தவர்கள் சந்தித்துள்ளனர். முதலமைச்சரும் சபைத் தலைவரும் தொலைபேசியில்





தொடர்பு கொண்டுள்ளனர். குறிப்பாக டிசம்பர் மாதம் நடுப்பகுதியில் இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற தொழிலுறவுக்கு கருத்தரங்கில் கலந்து கொண்ட இ.தொ.கா உறுப்பினர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆதரவைத் திரட்டியுள்ளனர் முதலமைச்சரும், சபைத்தலைவரும்.

இவ்வாறான நடவடிக்கைகளை அடுத்து சதாசிவம், இராஜரட்னம், கந்தசாமி ஆகிய உறுப்பினர்களை தவிர ஏனைய எட்டுப் பேரும் இ.தொ.கா தலைமையின் முடிவுக்கு மாறாக செயற்படத் தொடங்கினர் என்று குறிப்பிடலாம்.

எம். நடராஜப்பிள்ளையையும் எஸ். ரெங்கநாத்னும் நம்பிக்கையில்லாப் பிரேரணை பற்றி தொண்டமான் தம்முடன் தொடர்பு கொண்டு பேசாதாவாறு தொண்டமானுக்கு ஒழித்து திரிந்துள்ளனர். நம்பிக்கையில்லாப் பிரேரணை



கொண்டுவரும் காலகட்டத்தில் தாம் இருவரும் இந்தியாவிற்கு செல்லக் கூடும் என்ற வதந்தியையும் வேகமாக பரப்பி வந்துள்ளனர்.

ஆர்.தங்கவேல் அமைச்சர் அலிக் அளுவிகாராவின் ஏற்பாட்டில் அவரது கொழும்பிலுள்ள இல்லத்தில் தொண்டமான் தொடர்பு கொள்ள முடியாதவாறு ஒழிந்திருந்துள்ளார்.

எஸ்.கந்தையா, எஸ்.அருள்சாமி, ஏ.கதிரேசன், எஸ். வெள்ளையன், வி.விமலவன் ஆகியோர் கண்டி மாவட்ட யூ.என்.பி எம்.பியும் யூ.ஏன்.பியின் உப பொருளாளருமான ஜனாப் காதரின் ஏற்பாட்டில் நாவலப்பிட்டியில் ஒரு பங்களாவில் ஒழிந்திருந்தனர் எனத் தெரியவருகிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை சபையில் எடுக்கப்பட்ட தினத்திற்கு முதல் நாள் இ.தொ.கா உறுப்பினர்களுக்கென கூட்டப்பட்ட கூட்டத்திற்கு சதாசிவம், கந்தசாமி, ராஜரட்னம் ஆகியோரைத் தவிர வேறு எவரும் சமூகம் தரவில்லை. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமைக்கான காரணத்தையும் தெரிவிக்கவில்லை.

இவ்வேளை இ.தோ.கா உறுப்பினர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள் எனவும் அவர்களை விடுவிக்க நுவரெலியா மாவட்டத் தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் குதிக்கும் படியும் தொண்டமான் கேட்டுக் கொண்டார். யூ.என்.பி தமது கோரிக்கைகளை வழங்க மறுப்பது மட்டுமன்றி அதற்கு எதிரான அரசியல் நடவடிக்கையில் இறங்க விடாமலும் தடுக்கின்றது என்ற அடிப்படையில் தொழிற்சங்கப் பேதமின்றி (ஓரிரண்டு சங்கத்தினரைத் தவிர) இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் நுவரெலியா மாவட்டத்தில் டிசம்பர் 21ம் திகதி வேவை நிறுத்தத்தில் குதித்தனர். கண்டி மாவட்டத்திலும் பல தோட்டங்களில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அன்றைய தினம் மறைந்திருந்த மாகாண சபை உறுப்பினர்கள் எட்டுப் பேரில் ஏழு பேர் கண்டியில் பத்திரிகையாளர்கள் முன் தோன்றித் தாங்கள் கடத்தப்படவில்லை என்றும் நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் தாங்கள் யூ.என்.பியை ஆதரிக்கப் போவதாகவும் அறிவித்தனர்.

மறுதினம் குறிப்பிட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை சபையில் விவாதத்திற்கு எடுக்கத் தகுதியற்றது என்று மாகாண சபைத் தலைவர் தீர்ப்பளித்தார். விவாதத்திற்கு எடுக்கத் தகுதியற்றது என்ற க்ருத்துடன் எட்டு இ.தொ.கா உறுப்பினர்களும் உடன்பாட்டுடன் இருந்தனர். அவர்களில் சிலர் அந்நிலைப்பாட்டை ஆதரித்து உரையாற்றினர்.

அந்த எட்டு மாகாண சபை உறுப்பினர்களும் கடத்தப்படவில்லை அவர்கள் தமது உரிமைகளைத் தரமறுக்கின்ற யூ.என்.பியுடன் கூட்டுச் சேர்ந்து மக்களுக்கு துரோகம் இழைக்கிறார்கள் என்ற ஆத்திரத்தில் அவர்களில் நாலு பேரின் இல்லங்கள் தொழிலாளரின் தாக்குதல்களுக்கு உட்பட்டதாக அறிய முடிகின்றது. அந்த பீதியிலேயே எட்டுப் பேரும் அவர்களின் குடும்பத்தினரும் கண்டியிலேயே இருப்பதாக அறிய முடிகின்றது.

அந்த எட்டுப் பேருக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஸ்தாபனரீதியாக தான் அப்போது பலம் குறைந்திருப்பதை அறிந்த தொண்டமான் சாதாரண மக்கள் மத்தியில் சென்று அந்த எட்டுப் பேருக்கும் அவர்களுக்கு ஆதரவாக செயற்பட்ட இ.தொ.கா. பொதுச்செயலாளர் எம். எஸ். செல்லச்சாமிக்கும் எதிராக அபிப்பிராயத்தை பரப்பி வந்தார். மாகாண சபை உறுப்பினர்கள் விலை கொடுத்து வாங்கப்பட்டுவிட்டார்கள் என்றும் கூறப்பட்டது.

யூ.என்.பி எதிர்ப்பில் பொங்கிக் கொண்டிருந்த முழு மலையக மக்களையும் (இ.தொ.கா.வின் சாதாரண உறுப்பினர்களை மட்டுமன்றி முழு மலையக மக்களையும்) அவர்களுக்கு எதிராக அபிப்பராயம் கொள்ள வைக்கும் பிரச்சாரத்தில் மிகவும் கடுமையாக ஈடுபட்டார் தொண்டமான்.

இந்த அபிப்பிராயம் பரப்பும்போர் உச்சமடைந்த வேளையில் அந்த எட்டுப் பேருக்கும் செல்லச்சாமிக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவென ஜனவரி 2ம் திகதி அட்டனில் இ.தொ. காவின் தேசிய சபையை தொண்ட



மான் கூட்டினார். செல்லச்சாமியையும் எட்டுப் பேரையும் துரோகிகள் என்ற அபிப்பிராயம் படுமோசமாக பரப்பப் பட்டிருந்ததால் இ.தொ.காவின் சாதாரண உறுப்பினர்களின் மத்தியில் சென்று தேசிய சபையில் கலந்து கொள்ளும் சூழ்நிலை அவர்களுக்கு முற்றிலும் இல்லாமல் போனது.

தேசிய சபை கூடி கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதற்காக எட்டுப்பேரையும் கட்சியிலிருந்து இடைநிறுத்தியதுடன் செல்லச்சாமியை பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கியது.

ஆனால் அத் தேசிய சபை கூட்டத்தில் யூ.ஏன்.பி அரசாங்கத்திடமிருந்து மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை எவ்வாறு பெற்றுக் கொள்வது. அதற்கான வழிமுறைகள் என்ன என்பன பற்றி ஒன்றுமே முடிவெடுக்கப் படவில்லை.

செல்லச்சாமியையும் அந்த எட்டுப் பேரும் மலையக மக்களுக்கு துரோகமிழைத்து விட்டார்கள் அதற்காகவே அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தொண்டமான் கூறுகின்றார்.

மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் தொண்டமான் என்ன செய்யப் போகின்றார் என்பதிலேயே அவரை மக்கள் தலைவர் என்று சொல்வதும் துரோகி என்று சொல்வதும் தங்கி இருக்கின்றது.

தமது உரிமைகளை பெறுவதில் இ.தொ.கா அங்கத்தினர்கள் உட்பட ஏனைய அங்கத்தினரான மலையத் தொழிலாளர்கள் ஐக்கியப்பட்டு இருப்பதை நாசுக்காக தனது கட்சி 'களை எடுப்பிற்கு' மட்டும் தொண்டமான் வரையறை செய்து கொள்வாராயின் அவரது அரசியல் காலமும் மிகவும் வரையறுக்கப்பட்டுள்ளது என்பதை உணர வேண்டி வரும்.

மீண்டும் இ.தொ.காவும் தொண்டமானும் தனிக்காட்டு ராஜாவாக இருந்து யூ.என்.பியிடம் மண்டியிட்டு பேசித் தீர்க்கப் போவதாக கூறினால் மலையக மக்கள் நம்பப் போகிறார்களா?

யூ.என்.பி மீதான எதிர்ப்பைக் காட்டவில்லை என்பதற்காக செல்லச்சாமிக்கும் எட்டுப் பேருக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுத்து விட்டு தொண்டமான் மீண்டும் யூ.என்.பியில் ஒட்டிக் கொண்டால் அது மலையக மக்களுக்கு இழைக்கும் துரோகமாகமாட்டாதா?

மலையக மக்களின் உரிமைகளை பெறுவதில் முடிந்து விட்ட பேரப்பேச்சு அரசியலுக்குத் தொடர்ச்சி எழுத முற்பட்டால் தொண்டமானுக்கு மட்டுமல்ல இன்று யூ.என்.பிக்கு எதிராக ஐக்கியப் பட்டுள்ள மலையக மக்களுக்கும் பெரும் ஆபத்தையே விளைவிக்கும்.

யூ.என்.பிக்கு எதிராக செயற்படுவதற்காக காமினி திசாநாயக்காவிற்கு ஆதரவளிக்க முற்பட்டு தோல்வியடைந்த தொண்டமானுக்கு இ.தொ.காவை பிளவுபடுத்துமளவிற்கு செல்லச்சாமியையும் எட்டுப் பேரையும் வெளியேற்ற முடியுமென்றால் மக்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்பும் சகல மலையக அமைப்புகளுடனும் ஒன்றிணைந்து செயற்படுவது முடியாத காரியமல்ல. எட்டி எட்டி உதைக்கும் யூ.என்.பியுடனும் ஒரு காலத்து அரசியல் எதிரியான காமினி திசாநாயக்காவுடனும் ஏனைய எதிர்கட்சிகளுடனும் ஒன்றிணைய முடியுமாயின் களத்தில் நிற்கும் உரிமைக் கோரிக்கையாளர்களுடன் ஏன் மக்களின் நலன் கருதி ஒன்றுசேர முடியாது?

இ.தொ.கா உறுப்பினர்கள் கடத்தப்பட்டதாக கூறப்பட்டதை எதிர்த்து தொழிற்சங்க பேதமின்றி 2லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் நுவரெலியா மாவட்டத்தில் வேலை நிறுத்தம் செய்தார்களேயானால் அவர்களது உரிமைகளை பெற ஒன்றுபட்டு வேலை நிறுத்தம் செய்யமாட்டார்களா?

நன்றி - நூலகத்திட்டம்



# தொண்டமான் - ஐ.தே.க.

# உறவும் பிரிவும்?


எஸ். பாலகிருஷ்ணன்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் (இ.தொ.கா) தலைவர் தொண்டமான் ஐக்கிய தேசியக் கட்சியுடன் (ஐ.தே.க) கடந்த முப்பது வருடகாலமாகப் பேணிப் பாதுகாத்து வந்த உறவானது இப்போது முதன்முறையாக விரிசலடைந்து பிளவுபடும் நிலைமையை அடைந்துள்ளது. அதேநேரத்தில் தொண்டமான் நடைமுறைப்படுத்தி வந்த அவரது தலைமைத்துவப் பண்புகளுக்கு இ.தொ.காவினுள்ளேயே பெரும் சவால்கள் கிளம்பியுள்ளன. இந்த இரண்டு பிரச்சினைகளும் இன்றைய அரசியல் அரங்கில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட பிரச்சினைகளாக கலந்துரையாடப்பட்டு வருகின்றன. இவ்வேளையில் இப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு பேரிவனவாத சக்திகளும் அவர்களுக்குத் தளம் அமைத்துக் கொடுக்கும் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் மலையக மக்களுக்கு எதிரான விசமப் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

மேற்கூறிய இரண்டு பிரச்சினைகளின் தன்மைகளையும், அதனால் மலையக சமூகத்திற்கு ஏற்படுகின்ற தாக்கங்களையும் யதார்த்த ரீதியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் தொண்டமானின் தலைமைத்துவப் பண்புகளையும், தொண்டமான்-ஐ.தே.க உறவின் அடிப்படைத் தன்மைகளையும் ஆராய்ந்தறிந்து கொள்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும். கருத்தியல் (Ideologically) ரீதியாக நோக்கும் போது தொண்டமானின் தலைமைத்துவப் பண்புகளானது நிலமானிய சமூகத்தில் நிலவிய நிலவுடைமையாளர்களின் தலைமைத்துவப் பண்புகளுக்கு ஒத்ததான அதிகாரவாத, பலாத்கார நடைமுறைகளைக் கொண்ட, ஒரு வழிப்போக்கானதான ஒன்றாகும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைமைப் பதவியைத் தன்வசப்படுத்தி கொண்டதிலிருந்து தனது தலைமைப் பதவியைப் பாதுகாத்துக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருந்து தனது பதவிக்கு ஜனநாயக ரீதியில் சவால்கள் விடுக்கப்படும் போதெல்லாம் அவற்றைப் பலாத்கார வழிகளில் தடுத்துக் கொள்வதில் வெற்றி கண்டுள்ளார். தன்னை விமர்சிப்பவர்களையும், தனது நிலைப்பாடுகளை எதிர்ப்பவர்களையும் எவ்வகையிலாவது இ.தொ.காவை விட்டு வெளியேற்றுவது, தனக்கு ''ஆமாம் சாமி'' போடுபவர்களை பதவிகளில் அமர்த்துவது, தன்னை எதிர்க்காத, தனக்கு அடிமைப்பட்டு நடப்பவர்களைக் கொண்ட தேசிய சபை, நிர்வாக சபை போன்ற அமைப்புகளை ஏற்படுத்துவது, இதன் மூலம் இ.தொ.காவிற்கு ஒரு ''ஜனநாயக முகமூடியை'' அணிவிப்பது என்பன அவரது தலைமைத்துவ ரகசியங்கள். இது தவிர இ.தொ.காவின் ஊழல்களையும், கெடுபிடிகளையும் மூடி மறைப்பதிலும் தொண்டமான் புகழ் பாடுவதிலும் திறமையானவர்களை ஏனைய நிர்வாக நிலைகளில் இருத்தி அவர்களின் வயிற்றுப் பிழைப்பிற்கு வழிசமைத்துக் கொடுப்பதின் மூலம் ஒரு ''கட்டுக்கோப்பான'' அமைப்பாக இ.தொ.கா இயங்குவதை உறுதி செய்து கொண்டார் தொண்டமான்.

தொழிற் சங்கம் என்ற வகையில் சந்தா கட்டும் தொழிலாளர்களின் அன்றாடத் தொழிற் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் சம்பிரதாயக் கடமைகளை அரைகுறையாக நிறைவேற்றி வைக்கும் இ.தொ.காவானது அரசியலில் எந்த விதக் கொள்கைகளையோ, கோட்பாடுகளையோ அடிப்படையாகக் கொண்ட செயற்திட்டங்களுடனோ அல்லது மலையகத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்திலான ஒருங்கிணைந்த செயற்திட்டங்களையோ கொண்ட ஒரு அமைப்பாக என்றுமே இயங்கியது கிடையாது. மாறாக, தொண்டமான் என்ற தனி மனிதனின் தனிப்பட்ட நன்மைகளையும், தேவைகளையும், சலுகைகளையும் அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் ஒரு அமைப்பாகவே விளங்குகின்றது. அரசியல்மயப்படுத்தப்படாத, அறியாமையாலும், கல்வியறிவின்மையாலும் மூழ்கியிருக்கின்ற, தன்னம்பிக்கையற்றும், பேரினவாதக் கெடுபிடிகளின் விளைவாக பயத்துடனும், பீதியுடனும் வாழும் மலையகத் தொழிலாளர்கள் மத்தியில் பிரச்சாரங்களின் மூலம் தன்னை நிலைப்படுத்திக் கொள்வது தொண்டமானுக்கு அவ்வளவு பிரச்சினையாக இருந்ததில்லை. மாற்று அரசியல் அமைப்போ, அரசியல் நடவடிக்கைகளோ இல்லாத ஒரு சமூகத்தில் இவரின் அரசியல் ஆதிக்கத்திற்கு சவால் விடக் கூடிய சக்திகள் இன்னும் முறையாக உருவாகவில்லை; உருவாவதை தொண்டமான் அனுமதிப்பதும் இல்லை.

அவ்வப்போது தனது சுயநலம் நாடி தொண்டமான் மேற்கொண்ட கட்சித் தாவல் உட்பட பல நடவடிக்கைகளையும், மலையகத் தொழிலாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட இ.தொ.காவின் தலைவர் என்ற நிலையிலிருந்து மேற் கொள்வதன் காரணமாக அவற்றின் எதிர்ப்புணர்வுகளுக்கும் கசப்புணர்வுகளுக்கும் மட்டுமன்றி, அவற்றின் எதிர்த் தாக்குதல்களுக்கும் ஆளாக வேண்டிய நிலைமை இந்த மலையக தொழிலாளர்களுக்கு ஏற்படுவது ஒரு தொடர்கதையின் கட்டம் கட்டம் போல நீண்டு கொண்டே செல்கின்றது. 1970-77க்கு இடைப்பட்ட கால ஸ்ரீ.ல.சு.க, ல.ச.ச.க, இ.க.க, முக்கூட்டு ஆட்சியில் போது மேற்கொண்ட தொண்டமான் எதிர்ப்பு நடவடிக்கைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் மலையகத் தமிழ் தொழிலாளர்களேயாவர். இவர்களின் இந்தப் பிரச்சினைகளைப் பிரச்சாரம் செய்து பதவிக்கு வந்த ஐ.தே.கட்சியோ அல்லது அதனுடன் அரசில் இணைந்து கொண்ட தொண்டமானோ அப்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த வித நிவாரணத்தையும் இதுவரை பெற்றுத் தர முயன்றதில்லை. மலையக மக்களுக்கு அன்று அவ்வரசு ஏற்படுத்திய பிரச்சினைகளுக்குக் கூட இன்று வரை அவர் எந்தத் தீர்வையும் பெற்றுத் தந்தது கிடையாது. இது போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பேரம் பேசலில் புகழ் பெற்றவர் என வர்ணிக்கப்படும் தொண்டமான் ஒரு போதும் அரசியலில் பேரம் பேசியதும் கிடையாது.




அரசியல் ரீதியில் தொண்டமான் ஐ.தே.கட்சியின் 20 வருடகால உறவை நோக்கும் போது இது மலையக மக்களின் உரிமைகளையும், தேவைகளையும் அடிப்படையாகக் கொண்ட உடன்பாட்டுடனான ஒரு உறவல்ல. தன்னுடைய நிலையைப் பலப்படுத்திக் கொள்வதற்காக இம் மக்களைப் பணயம் வைத்த ஒரு உறவாகவே அது அமைந்துள்ளது.

உதாரணமாக 1964ம் ஆண்டு சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கைக்கு (தன்னைக் கலந்தாலோசிக்காமல் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால்) எதிர்ப்புத் தெரிவித்த தொண்டமான் 1967ம் ஆண்டு ஐ.தே.க அரசு கொண்டு வந்த இவ்வுடன்படிக்கையின் அமுலாக்கல் சட்டத்திற்குப் பூரண ஆதரவையும் வழங்கி தனது நியமனப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பாதுகாத்துக் கொண்டார். இதுவே இந்த நாட்டில் பிறந்து, வளர்ந்து, இந் நாட்டிலேயே நிரந்தரமாக வாழ சகல உரிமைகளையும் கொண்ட மலையக மக்களில் பல இலட்சக்கணக்கானவர்களின் நாடு கடத்தலுக்கு வழி வகுத்தது.

1983ம் ஆண்டு இனக் கலவரத்தை ஐ.தே.கட்சியே திட்டமிட்டு நடத்தியது என்று அதனுடைய பொருளாளரே கூறியிருக்கிறார். 1983ம் ஆண்டு இனக் கலவரத்தின் போது ஜே.ஆர். ஜயவர்த்தனவின் அரசாங்கம் நடந்து கொண்ட விதமானது இந்த சந்தேகத்தை அப்போதே ஏற்படுத்தியிருந்தது. மலையக மக்களின் நன்மை கருதியே இந்த அரசுடன் இணைந்திருக்கின்றேன் என மலையக மக்கள் மீது பழியைப் போட்டு தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் தொண்டமான் 1983ம் ஆண்டிற்குப் பிந்திய ஐ.தே.கட்சி அரசில் எம் மக்களின் நன்மை கருதி அங்கம் வகிக்கின்றாரோ தெரியவில்லை. இந்த இணைப்பின் மூலம் இவர் மக்களுக்குப் பெற்றுத் தந்த உரிமைகள் என்ன என்பது அவருக்குத்தான் வெளிச்சம்.

1993ம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் மத்திய மாகாண சபையின் அதிகாரத்தை ஐ.தே.கட்சி கைப்பற்றிக் கொள்வதற்கு காரணமாக இருந்தவர்கள் மலையகத் தமிழர்களும் இ.தொ.காவுமே. எனினும் மத்திய மாகாண கல்வி அமைச்சுப் பதவியை இ.தொ.காவின் பொறுப்பில் வைத்துக் கொள்வதற்கு இவர்கள் மேற்கொண்ட முயற்சியும் அவ் விடயத்தில் ஐ.தே.கட்சி நடந்து கொண்ட விதமும் எவ்வகையிலானது?

மலையகப் பாடசாலை ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக உருவாக்கப்பட்ட சிறிபாத கல்வியியல் கல்லூரியின் நிலைமை என்ன? இது போன்ற சிறிய பிரச்சினைகளைக் கூடத் தீர்த்து வைக்கத் தகுதியற்ற இவ்வுறவின் நோக்கம் என்ன?

1986ம் ஆண்டு நவலோக்க வைத்திய சாலையில் தம்மை அனுமதித்துக் கொண்டு பிரார்த்தனை என்ற பெயரில் பிரஜாவுரிமை பெறுவதற்காக இவர் ஆடிய பித்தலாட்டம் ஒன்றைத் தவிர கடந்த 30வருட காலமாக மலையக மக்களின் அரசியல் உரிமைகளுக்காகப் போராடிய வரலாறு தொண்டமானுக்குக் கிடையாது. அப்படி ஆடியும் பிரஜாவுரிமை என்பது இன்றும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே தொடர்ந்து கொண்டே வருகின்றது.

தொண்டமானின் ஐ.தே.கட்சி அரசுடனான முப்பது வருடகால உறவு ஐ.தே.கட்சியைப் பலமான ஒரு கட்சியாக ஆக்கியதோடு அதனுடைய பேரினவாதப் போர்வையை மூடி மறைத்துக் கொள்வதற்கும் உதவியாக செயற்பட முடிந்ததே தவிர மலையக மக்கள் ஒரு தனித்துவமான இனம் என்ற வகையில் அவர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் ஒன்றுக்கேனும் அரசியல் ரீதியான தீர்வைக்காண உதவியதில்லை.

தொழிலாளர்களை விட தலைநகரத்து வியாபாரிகளுக்கு சேவை செய்வதில் முன்னுரிமை அளிப்பது இ.தொ.காவின் உயர்மட்டத் தலைமைகளின் வழக்கமாகிவிட்டது. இதன் மூலம் ''தொண்டமானுக்குத் துதிபாடும்'' ஒரு வியாபாரிகளின் கூட்டத்தையே உருவாக்கக் கூடிய தகுதி இ.தொ.காவிற்கு ஏற்பட்டுள்ளது. இந்த வர்த்தகர்கள் ஐ.தே.கட்சியின் சந்தைப் பொருளாதாரக் கொள்கையின் மூலம் தமது பொருளாதார வளங்களைப் பெருக்கிக் கொள்வதற்காக ஐ.தே.கட்சியுடனான இ.தொ.காவின் உறவைப் பாதுகாப்பதிலும் ஈடுபட்டுள்ளார்கள். இந் நிலைமையானது ஐ.தே.கட்சி அரசுடன் இ.தொ.காவின் உயர் மட்டத் தலைமைகள் தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டிய நிலைமையை உருவாக்கியுள்ளது.

இந் நிலையில் தொண்டமானுக்கும்-ஐ.தே.கட்சி அரசுக்கும் இடையிலான முரண்பாடு ஏற்படுவதற்கு உண்மையான காரணம் என்ன என்பது பற்றிய பல சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாக தான் முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றருக் கொள்ள அரசு மறுத்தமையைக் காரணம் காட்டி தனது முரண்பாட்டை மக்கள் சார்பாக நியாயப்படுத்த முயல்கின்றார் தொண்டமான். தன்னை உடலுழைப்பாலும், சந்தாப் பணத்தினாலும், அரசியல் ஆதரவினாலும் வாழ வைத்துக் கொண்டிருக்கிற மலையக மக்களுக்கு உருப்படியாக எதையும் செய்ய இயலாமற் போன குற்றவியல் மனநிலை தொண்டமானுக்கு சிலவேளைகளில் இருக்கலாம். எனினும், தொண்டமான் அரசுடன் இணைந்திருப்பதன் மூலம் அவர் அனுபவிக்கும் சலுகைகளிலிருந்து அவரை நீக்குவதும், தமிழர்களின் ஆதரவு இல்லாமல் தனிச் சிங்கள வாக்காளர்களின் வாக்குகள் மூலம் ஐ.தே.கட்சியை வெற்றி பெறச் செய்வதன் மூலம் இலங்கை அரசியலில் பேரினவாத சக்திகளின் நடவடிக்கைகளும், அதற்கு இசைவாக நடந்து கொள்ளும் தனது தயார் நிலையை வெளிப்படுத்தும் ஜனாதிபதியின் நடையுறையுமே இந்த முரண்பாட்டுக்குக் காரணமாகும்.




தொண்டமானைப் பற்றி நன்குணர்ந்த ஐ.தே.கட்சியின் முன்னாள் ஆட்சித் தலைவர்களான ஜே.ஆர்.ஜயவர்த்தனவும், பிரேமதாசவும் தொண்டமானுக்கு சில சலுகைகளை வழங்கி அதன் மூலம் அவரைத் தம் வசப்படுத்திக் கொள்வதில் தந்திரம் படைத்தவர்களாக செயலாற்றினர். இதன் மூலம் தமது ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தேவையான மலையக மக்களின் ஆதரவைத் தொண்டமான் மூலம் பெற்றுக் கொண்டனர். 1977ம் ஆண்டு முதல் இன்றுவரை ஐ.தே.கட்சி அரசினால் மலையக மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பேரினவாத கெடுபிடிகளையும் அவற்றைக் கண்டும் காணாதது போல நடந்து கொண்ட தொண்டமானின் நடைமுறையையும் புரிந்து கொள்வதின் மூலம் மேற்கூறிய் நிலைமையை உணர்ந்து கொள்ளலாம்.

சீரழிந்து வருகின்ற தமது உறவை அடிப்படையாகக் கொண்து தனது அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முயற்சியே தொண்டமான் மலையக மக்கள் தொடர்பாக கோரிக்கைகளை வைத்துப் பேரம் பேச முற்பட்டதும், எதிர்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தமக்கிருக்கும் தயார் நிலையை வெளிப்படுத்தியதுமாகும்.

தொண்டமான் எதிர்க் கட்சிகளுடன் பேரம் பேச முற்பட்டமையானது ஐ.தே.கட்சியினுள் சலனத்தை ஏற்படுத்தியதன் விளையாக அவருடனான உறவைச் சீராக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் இந்த உறவு நீடிக்க வேண்டுமேயானால் தொண்டமான் பற்றிய ஜனாதிபதியின் நிலைப்பாடுகளில் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

தனது தலைவரின் கட்டளைகளை மிகவும் பணிவுடன் ஏற்று நடந்ததன் மூலம் தலைவனின் பணிவுள்ள சேவகனாகத் தன்னை அறிமுகம் செய்து கொண்டவர் செல்லச்சாமி. இதன் மூலம் கடந்த 27 வருடங்களாகத் தனது பொதுச் செயலாளர் பதவியையும் பாதுகாத்துக் கொண்டார். இ.தொ.காவின் அதிகாரத் துஷ்பிரயோகம், ஊழல் போன்றவற்றை மூடி மறைப்பதற்கு உதவியதன் மூலம் இ.தொ.காவைத் தலைவரின் கட்டுக்கோப்பான அமைப்பாகத் திகழ வழிசமைத்துக் கொடுத்துள்ளார். இவர் சமீபத்தில் தொண்டமானினதும் பேரனினதும் இ.தொ.கா நிதி ஊழல் சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கைகளில் இருந்து இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொண்டமானின் தனிமனிதத் தீர்மானங்களையே இ.தொ.காவின் ஜனநாயகத் தீர்மானங்களாகக் கொள்வது இ.தொ.காவிற்கு ஒரு புதிய அனுபவமல்ல. இந் நிலையில் மத்திய மாகாண சபையின் முதலமைச்சருக்கு எதிராக காமினி திசாநாயக்க கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து இ.தொ.கா உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும் என்ற தொண்டமானின் வேண்டுகோளை எதிர்த்து செல்லச்சாமி போர்க்கொடி தூக்கியதுபெரும் ஆச்சரியத்தை தூண்டியுள்ளது. செல்லச்சாமியின் இந்த எதிர்ப்புக்கு இரு முக்கிய காரணங்கள் அடிப்படையாகின்றன. ஒன்று இ.தொ.காவின் வேறு நிதி ஊழல்களுடன் தொடர்புடையவரென சில வருடங்களாகப் போட்டு வந்த தனது பேரனை இ.தொ.காவில் பின்கதவு வழியாக இ.தொ.காவின் நிதிச் செயலாளராக்கியமையும், அவரைத் தலைமைத்துவத்திற்கு கொண்டு வருவதற்காக தொண்டமான் மேற்கொள்ளும் முயற்சிகளுமாகும்.

மற்றையது, ஐ.தே.க அரசு இவருக்கு வழங்கியிருக்கின்ற சலுகைகளைக் கைவிட்டு அரசிலிருந்து வெளியேற அவர் விரும்பாமை. இச் சந்தர்ப்பத்தில் ஐ.தே.க அளித்த வாக்குறுதியை தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட செல்லச்சாமி, ம.மா.சபையில் தனது ஆதரவாளர்களைத் தன்பக்கம் திசை திருப்பி ஐ.தே.கட்சிக்கான தனது விசுவாசத்தை

→ 11

நன்றி - நூலகத்திட்டம்



# கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக முஸ்லீம் மாணவர் விவகாரம்:

**கிழக்குப் பல்கலைக் கழக முஸ்லீம் மாணவர்களது விவகாரம் தொடர்பாக அப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அ. சிவரெத்தினம் என்பவர் இதழ் 35இல் தனது அபிப்பிராயங்களை எழுதியிருந்தார். அவரது அபிப்பிராயங்களுக்கு சில எதிர்வினைகளை முன் வைக்கிறார் ஏறாவூரைச் சேர்ந்த மீ.மு.சாலிஹ். அடுத்த இதழில் தனது நியாயங்களைத் தருகிறார் வே.மணி. வாசகர்களும் எழுதலாம்.**

## வீட்டில் தொலைத்த சாவியை விளையாட்டரங்கில் தேடிய கதையோ

### சிவரெத்தினத்திற்கு ஓர் எதிர்வினை

**மீ.மூ.சாலிஹ்**

சரிநிகர் இதழ் 35இல் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் முஸ்லீம் மாணவர்கள் -சாத்தியமான ஒரு தீர்வு? என்னும் தலைப்பில் வெளி வந்த கட்டுரையில் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் முஸ்லீம் மாணவர்களைச் சேர்ப்பது, அம் மாணவர்களது பாது காப்புக்கு உகந்தது அல்ல என்று காரணம் காட்டி, முஸ்லீம் மாணவர்களை நடப்பாண்டுக்கான அனுமதியில் சேர்த்துக் கொள்ள வேண்டாமென அமைச்சரவை அறிவித்துள்ளது என்ற குறிப்புடன் தனது கட்டுரையைத் தொடங்கிய கிழக்குப் பல்கலைக் கழகக் கட்டுரையாளர், 'புவியியல் ரீதியாகவும், சமூக உறவு ரீதியாகவும் தமிழரும் முஸ்லீம்களும் மட்டக்களப்பில் பின்னிப் பிணைந்த நிலையில் இருக்கும் போது பல்கலைக் கழகத்தில் முஸ்லீம் மாணவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று குரல் ஒலிக்கிறதென்றால் அதன் காரணம் என்ன என்பதை அடையாளம் காண வேண்டும் என்கிறார். அடையாளத்தையும் காட்டுகின்றார். அதாவது இக்குரல்

1. கிழக்கு முஸ்லீம்களால் எழுப்பப்படுவதில்லை
2. கொழும்பை மையமாகக் கொண்டு வாழ்கின்ற முஸ்லீம்களாலும், மட்டக்களப்பில் வசதி படைத்த முஸ்லீம்களாலுமே எழுப்பப்படுகிறது.

இவ்வாறு அடையாளம் காட்டி விட்டு, 'கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இல்லாத வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக இரு சமூகத்தினரும் நிர்வாகத்துடனும் அரசுடனும் போராடுவதற்குப் பதில் 'வேலைக்கள்ளிக்குப் பிள்ளைச் சாட்டு' என்ற போக்கில், இனப் பிரச்சினையைக் காரணமாகக் காட்டி நழுவிச் செல்வது ஆபத்தாகும்' எனச் சிவப்புக் கொடி காட்டுகிறார்.

கட்டுரையாளரின் இக் கூற்று எதனை அடையாளம் காட்டுகிறது? முஸ்லீம் மாணவர்களின் கல்வி நலன்களை அடையாளம் காட்டுகின்றதா? அல்லது இல்லாத வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் போராட்ட நலன்களை அடையாளம் காட்டுகிறதா?

வடக்கு, கிழக்கிலிருந்து அகதிகளாய்ச் சிதறுண்டு, நாடளாவிய ரீதியில் தஞ்சம் பெற்ற முஸ்லீம்களுக்கு, கட்டுரையாளரின் குரல் அடையாள ஆய்வு, எத்தகைய பாதிப்பையோ படிப்பினையையோ ஏற்படுத்தமாட்டா! ஏன்? அவர்களின் 'மையம்' நாடளாவிய ரீதியாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது!

'ஆற்றில் நனைத்தெடுத்த விரல் நீரில் தான் உப்புச்சுவை; ஆற்றில் அல்ல' என்பது போல், எடுத்துக்கொண்ட பிரச்சினையில், கருதியதை மட்டும் வலியுறுத்திக் ெ ...க் காரணம் சமைப்பது புத்தி ஜீவித்தனமாக இருக்கலாம்! ஆனால் 'உண்மையின் சார்பாக நின்று சிந்திக்கின்ற' மானிட தர்மமாக இருக்கமுடியாது.

'மட்டக்களப்பில் 75%க்கு அதிகமான வர்த்தக ஸ்தாபனங்கள் முஸ்லீம்கள் உடையவை. ஏறத்தாழ 500 முஸ்லீம் குடும்பங்கள் தமிழருடன் சேர்ந்து வாழ்கின்றனர். அவர்களின் தேவைகளும், நிர்வாகங்களும் ஒருவரில் ஒருவர் தங்கியிருந்தல் என்ற நிலையிலேயே நிறைவேற்றப்படுகினறன. இது கட்டுரையாளரின் கூற்று.

தமிழர், முஸ்லீம்களின் ஒட்டும், உறவும் இவற்றைவிடப் பரந்தது; ஆழமானது! கட்டுரையாளர் எங்களூருக்கு வந்து, சந்தை, நெல் கொள்வனவு நிலையம், வீடு கட்டிட நிர்மாணிப்புத்தளங்கள், தெருக்களில் அவல், பழவகை, இலைக்கறி முதலியவற்றைக் கூவி விற்கும் நிகழ்வுகளை அவதானிக்க வேண்டும். எமது மதிப்புக்குரிய தமிழ் டாக்டர் ஒருவரின் மாமி காலமானதும், சவத்தைச் சுமந்து சென்று ஈமக் கிரியைகளை நடத்துவித்தவர்கள் ஏறாவூர் முஸ்லீம்கள். நீசத்தனமான நடிப்போ, தந்திரோபாயமான மினுக்கோ இல்லாத, இதயசுத்தியான உறவையும், அவர்களின் கொள்வனவு, கொடுப்பனவின் நம்பிக்கை, நாணயசுத்தியையும் நிதர்சனமாய்க் காணலாம். பசிதீர்ந்து மகிழ்ந்த அவல்காரி நாகம்மை ஆச்சி 'அடிமகள் அனிசா, திண்டா உன் கைராசிச் சோறு கறி தானடி திங்கணும்' என்றுகூறி 'யாவரும் கேளிராய்' ஓம்பும் உறவைப் பார்க்கலாம்.

> **இந்த வைரம் பாய்ந்த உறவுக்கு முரணாக -ஏறாவூர் முஸ்லீம் விவசாயிகளின் உடமையான சுமார் 40,000 ஏக்கர் வயல் நிலம், எவ்வாறு சூறையாடப்பட்டு அனுபவிக்கப்பட்டு வருகின்றது? பல்லாயிரம் கால் நடைகளுக்கு நடந்தது என்ன? விவசாய, கால்நடைத் துறைகளுக்குப் பொறுப்பான அலுவலகம், திணைக்களம் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?**

இங்கு வாழ்கின்ற தமிழ்- முஸ்லீம்களில் விசாயிகள், வியாபாரிகள், தச்சர், கொல்லர், மேசன், பொற்கொல்லர், குயவர், மீனவர், பரிகாரிமார், கூலித் தொழிலாளர் என்று பலதரப்பட்ட பல வகைப்பட்ட ஆண்- பெண்களிடமும் தூய உறவையும், அந்தரங்க சுத்தமான அபிமானத்தையும் காணலாம். காரணம் இவர்களிடம் அதிகார, தலைமைத்துவம், புத்திஜீவித்தனமான பொய் புரட்டு பித்தலாட்ட சந்தர்ப்ப சீலங்கள் கிடையாது. மேலும் நம்மால் மூச்சுக்கு மூச்சு பீத்திக் கொள்ளப்படுகின்ற இன உறவு, சமூக இணக்கம், புரிந்துணர்வு, மனித நேயம் போன்ற அலங்கார பஜனைவார்த்தைகளை அவர்கள் அறியா விட்டாலும் அவ்வார்த்தைகளின் அர்த்த கோலத்தை, இந்தத் தமிழ் முஸ்லீம் மனிதர்களிடம் காணலாம். மகேஸ்வரியின் குழந்தைக்கு குளிகை கொடுக்க, தன் முலைப்பாலை வழங்கிய ஹச்சும்மாக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

> **அமரர் திரு.வ.நல்லையா, கல்குடாத் தொகுதியில் போட்டியிட வந்த போது, அவரது வேட்பு மனுவுக்குரிய பணத்தைக் கட்டியும், தேர்தல் பணிகளைப் பொறுபேற்றும் வெற்றி கண்ட உறவுக்கு வரலாறு கண்டவர், ஏறாவூர் முஸ்லீம் விவசாயிகள். இன்னொரு தடவை அதே தொகுதியில் திரு நல்லையாவுடன் போட்டியிட்ட ஜனா எம்.ஏ.சி.எம் சாலிஹ் என்ற மாணிக்கவர்த்தகரைப் புறக்கணித்து, நல்லையாவின் வெற்றியை உறுதிப்படுத்துமுகமாக, ஏறாவூர்ப் பெருமகன் யு.வி.மீராலெப்பையைப் போட்டியிடச் செய்து, இன உறவுக்கு இலச்சினை தீட்டியவர்கள் ஏறாவூர் விவசாயிகள்.**

ஆனால், புவியியல் ரீதியாகவும் சமூக உறவு ரீதியாகவும் தமிழரும், முஸ்லீம்களும் மட்டக்களப்பில் பின்னிப் பிணைந்த நிலைக்கு 75%க்கு மேற்பட்ட வியாபாரத்தையும் 500 குடும்பத்தையும் எடுத்துக் காட்டியதோடு, அதே மட்டக்களப்பு கள்ளியங்காடு ஸாஹிரா முஸ்லீம் வித்தியாலயத்தின் இன்றைய புனர் அவதாரத்தையும் குறிப்பிடலாம். அன்றியும், ஏறாவூர் அலிகார் மகா வித்தியாலயத்தில், 'பாதுகாப்புக்கு உகந்தது அல்ல' என்று கற்பிக்க மறுக்கும் தமிழ்ப் பட்டதாரிகளான புத்திஜீவிகளான- ஆசிரியர்களைச் சந்தித்து

* தமிழ் டாக்டரும், ஊழியர்களும் ஏறாவூர் அரசினர் வைத்தியசாலையில் பணியாற்ற முடியுமென்றால்,
* தமிழ் மனேஜரும், ஊழியர்களும் ஏறாவூர் வங்கிகளில் தொழில் புரிய முடியுமென்றால்
* தமிழ் செயலாளரும், உத்தியோகத்தர்களும் ஏறாவூர் செயலகத்தில் கடமை செய்ய முடியுமெனறால்
* O/L, A/L பரீட்சைக் காலங்களில் ஏறாவூரிலுள்ள பரீட்சை நிலையங்களில் நீங்களே பரீட்சை உத்தியோகத்தர் ஊழியர்களாய் பதவி தாங்கி உழைக்க முடியுமென்றால், குறித்த மத்திய மகா வித்தியாலயத்தில் கற்பிக்க

'வேலைக்கள்ளிக்குப் பிள்ளைச் சாட்டு' என்ற போக்கில், இனப்பிரச்சினையைக் காரணம் காட்டி நழுவிச் செல்வது ஆபத்தாகும்' என்று கட்டுரையாளர் கேட்டிருத்தல் வேண்டும். கருதியதை மட்டும் வலியுறுத்திக் கொள்ள காரணங்களைச் சமைக்கும் போது இத்தகைய 'விடுபடல்கள்' அவசியம் போலும்.

இல்லையேல் பல சான்றாதாரங்களைக் கொண்டு தமிழர் முஸ்லீம்களின் பின்னிப் பிணைந்த உறவையும் ஒருவரில் ஒருவர் தங்கியிருத்தல் நிலையையும் கண்ட கட்டுரையாளர், இந்த வைரம் பாய்ந்த உறவுக்கு முரணாக -ஏறாவூர் முஸ்லீம் விவசாயிகளின் உடமையான சுமார் 40,000 ஏக்கர் வயல் நிலம், எவ்வாறு சூறையாடப்பட்டு அனுபவிக்கப்பட்டு வருகின்றது? பல்லாயிரம் கால் நடைகளுக்கு நடந்தது என்ன? விவசாய, கால்நடைத் துறைகளுக்குப் பொறுப்பான அலுவலகம், திணைக்களம் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை? என்ற வினாக்களை எழுப்பி உசாவியிருக்கலாம்....

'மட்டக்களப்புப் பகுதியில் பயங்கரவாதமில்லை. இனப்பிரச்சினை இல்லை. இருப்பது இரு இன சமூகங்களுக்கிடையில் அதிகாரம் பகிர்வது மட்டுமான பிரச்சினை தான்' என்றால் மேற்காட்டிய ஆக்கிரமித்துப் பிடுங்கலை, எந்தப் பிரச்சினையாக அடையாளமிடுவது?

முஸ்லீம் மாணவர்களைத் திரும்ப வரவழைப்பதில் எடுக்கப்பட்ட முயற்சிகள் போல், முஸ்லீம் விவசாயிகளின், கால்நடை வளர்ப்போரின் திரும்பச் செல்கைக்கு முயற்சிகள் எடுக்கப்பட்டனவா?

வைபவங்கள், விருந்தளிப்புகள், வரவேற்புகளில் இன உறவு குறித்துத் கனிந்து, கசிந்து உருகி வழியும் அலுவலக, திணைக்கள மனிதப் பழங்கள், குறித்த அவலங்களில் காட்டிய கரிசனை என்ன? ஏற்படுத்திய தீர்வுகள் என்ன?

இனவெறியின் -துவேசத்தின்- ஓர நீதியின் நதி மூலம் வெகுஜனங்களான தமிழ், முஸ்லீம் வியாபாரிகள், விவசாயிகள், தொழிலாளர்கள், நெருங்கி வாழும் குடும்பத்தினர் போன்ற மனிதர்களிடம் இல்லை! அமரர் திரு.வ.நல்லையா, கல்குடாத் தொகுதியில் போட்டியிட வந்த போது, அவரது வேட்பு மனுவுக்குரிய பணத்தைக் கட்டியும், தேர்தல் பணிகளைப் பொறுபேற்றும் வெற்றிகண்ட உறவுக்கு வரலாறுகண்டவர், ஏறாவூர் முஸ்லீம் விவசாயிகள். இன்னொரு தடவை அதே தொகுதியில் திரு நல்லையாவுடன் போட்டியிட்ட ஜனா எம்.ஏ.சி.எம் சாலிஹ் என்ற மாணிக்கவர்த்தகரைப் புறக்கணித்து, நல்லையாவின் வெற்றியை உறுதிப்படுத்துமுகமாக, ஏறாவூர்ப் பெருமகன் யு.வி.மீராலெப்பையைப் போட்டியிடச் செய்து, இன உறவுக்கு இலச்சினை தீட்டியவர்கள் ஏறாவூர் விவசாயிகள்.

'பன்றிகள் பயிரை அழிக்கின்றன' என்று முறையிட்ட முஸ்லீம் விவசாயிகளிடம், 'பன்றியைச் சுட்டுச் சாப்பிடுங்கள்' என்று கூறிய தமிழ் அதிகாரியை, கண்டித்து நடத்திய கிளர்ச்சிக்கு தோழிணைந்து நின்றவர்கள் திரு தாமோதரம், திரு.பொன்னுத்துரை, திரு சின்னத்தம்பி என்ற தமிழ் மனிதர்கள்!

தமிழ் முஸ்லீம் மக்களின் இனஉறவு நிகழ்வுகள், இவ்வாறு பலவற்றை நினைவுகூர முடியும்.

எனவே, இன வேற்றுமை, விரிசலுக்கான மூலத்தை தமிழ் முஸ்லீம் மக்களிடம் தேடுவது, வீட்டில் தொலைத்து விட்ட சாவியை விளையாட்டரங்கில் தேடிய கதையாகும்!

தமிழ் -முஸ்லீம் பொதுமக்களை, அவர்களின் தேவையை, கோரிக்கையை நிர்வகிப்பதற்காக, நெறிப்படுத்துவதற்காக ஃபேன், ஃபோன், வாகன வசதிகள் மலிந்த அலுவலகம், திணைக்களங்களில் அதிகார பரிபாலனம் செய்தருளிக் கொண்டிருக்கும் சக்திகளை, அவற்றின் திருவிளையாடல்களை மனித தர்மத் துணிச்சலுடன் அலசி ஆய்வு நடாத்த வேண்டும். இனஉறவில் ஏற்படும் கிழிசல் கீழ்மைகளுக்கு, இச்சக்திகளில் நாவுக்கும் நெஞ்சுக்குமுள்ள குணார்த்தங்களை நிதானிக்க வேண்டும்.

மேலும், இந்த சக்திகள், ஏதோ ஒரு காலத்தில் வளர்ந்து வரும் மாணவ சமுதாயமாயிருந்து எதையெதையோ கட்டியெழுப்பி விட்டு, இன்று என்ன செய்கிறதென்றும் நோக்க வேண்டும்.

> **'பன்றிகள் பயிரை அழிக்கின்றன' என்று முறையிட்ட முஸ்லீம் விவசாயிகளிடம், 'பன்றியைச் சுட்டுச் சாப்பிடுங்கள்' என்று கூறிய தமிழ் அதிகாரியை, கண்டித்து நடத்திய கிளர்ச்சிக்கு தோழிணைந்து நின்றவர்கள் திரு தாமோதரம், திரு.பொன்னுத்துரை, திரு சின்னத்தம்பி என்ற தமிழ் மனிதர்கள்!**

இன்று ஏறாவூர் விவசாயிகளும், கால் நடை வளர்ப்போரும் சூறையாடப்பட்ட தமது உடமைகளுக்கு அவ்வுடமைகளை இன்று அனுபவிப்போரிடமிருந்து குத்தகை, ஆயம் என்ற அடிப்படையில் சொற்ப வருவாயைப் பெற்று வருகின்றனர். இந்த ஏற்பாட்டை உருவாக்கி வழிநடத்திக் கொண்டிருப்போர் புவியியல் ரீதியில் சமூக உறவு ரீதியாகவும் தனித்திருக்கும் வேடிக்கையான ஒப்பீட்டுக்குரிய மனிதர்கள் என்பதைக் கட்டுரையாளர் அறிய வேண்டும்.

> **மகேஸ்வரியின் குழந்தைக்கு குளிகை கொடுக்க, தன் முலைப்பாலை வழங்கிய ஹச்சும்மாக்கள் இன்றும் இருக்கிறார்கள்.**



முடிவாக, இனியும், இனியும் 'அழுத ஓநாய்', 'உருத்திராட்சப் பூனை' நாடகங்களை நடத்திக் கொண்டும், சுவைத்துக் கொண்டுமிருப்போர், மானிட நேயத்தில் சத்தியப் பிரமாணமெடுத்து தமிழ், முஸ்லீம் சௌஜன்னியப் பேருறவை வாழ்ந்து வாழ்விக்கவும், நடந்து நடப்பிக்கவும் தம்மை அர்ப்பணமாக்க வேண்டும். இது, கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு மட்டுமல்ல தமிழ் முஸ்லீம்களின் பிரச்சினைகள் அனைத்திற்கும் சாத்தியமான ஒரு தீர்வு!

நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் அரசியலமைப்புக்களும் இனப்பிரச்சினையும் -5

## செம்பாட்டான்

''பிரித்தானியர் ஆட்சியில் அதற்கு நம்பிக்கையும் விசுவாசமும் பண்பாடும், பணிவும் மிக்க இலங்கையர்கள் சுதந்திரம் தருமாறு கேட்கவில்லை. கௌரவமான குடியுரிமையையே கோருகின்றார்கள்.''


கோல்புறூக் அரசியற் திட்டத்தின்மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலக் கல்வித் தகைமையினூடாக அரசியலுக்கு வந்த E.W.பெரேராவின் கூற்று இது.

கோல்புறூக்கினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலக்கல்வி தன்னகத்தே நச்சு விதைகளையும் கொண்டிருந்தது. அது தனது காலனித்துவ அரசுக்கு ஏற்ற வகையிலான ஒரு கூட்டத்தை உள்ளூரில் உருவாக்கியதோடு அக்கூட்டத்தவரே உள்ளூர் அரசியல் தலைமையாக எழுச்சி பெறும் வாய்ப்பையும் கொடுத்திருந்தது. இத்தலைமை காலனித்துவ ஆட்சியோடு பொருதுவதற்கு விரும்பவில்லை. மாறாக அவர்களது ஆட்சியை ஏற்றுக்கொண்டு உள்ளூர் நிர்வாகங்களில் ஒருசில சலுகைகளை பெறுவதையே நோக்கமாக கொண்டிருந்தது. இத்தலைமையின் பொருளாதார அடித்தளமும் பெருந்தோட்ட பொருளாதாரத்துடன் இணைக்கப்பட்டதாக இருந்தமையினால் தமது கல்வி, அதன்மூலமான பட்டம், பதவிகள் என்பவற்றிற்கு அப்பால் பொருளாதார ரீதியாகவும் காலனித்துவ ஆட்சியோடு பிணைக்கப்பட்டிருந்தனர். இதனால்தான் பூரண சுதந்திரக் கோரிக்கையை முன்வைக்காது காலனித்துவ ஆட்சியை ஏற்றுக்கொண்டு ஒரு சிலசலுகைகளை அவர்களிடம் கோரிநின்றார்கள். இதன் அடிப்படையிலேயே E.W பெரேராவின் கூற்றும் வெளியாகியிருந்தது. இலங்கையின் முதன் முதலில் எழுச்சியடைந்த உள்ளூர்த் தலைமை இக்கற்றோர் குழாமையே முழுமையாக கொண்டிருந்தது. E.W பெரேரா, முத்துக்குமாரசுவாமி,ஜேம்ஸ்பீரிஸ், சேர்- பொன் அருணாசலம், D.B. ஜெயதிலகா, D.S.சேனநாயக்கா போன்றோர் இவ்அணியில் முக்கியமானவர்களாக விளங்கினர். இவர்களில் பலர் உயர்குடும்பத்தில் பிறந்து கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்று பின்னர் இங்கிலாந்தின் கேம்பிறிட்ஜ், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களாக விளங்கினர்.

இந்தியாவிலும் இக்காலத்தில் ஆங்கிலம் படித்த கற்றோர் குழாமே அரசியலில் முன்னின்றது. நேரு, காந்தி போன்றவர்கள் ஆங்கிலம் படித்தவர்களாக இருந்த போதும் அத்தலைமையின் பொருளாதார அடித்தளம் பிரித்தானியரில் தங்கியிருந்ததாக இருக்கவில்லை மாறாக அவர்களின் பொருளாதார வளர்ச்சியை சிதைப்பவர்களாகவே பிரித்தானியர்கள் காணப்பட்டனர். இதனால் இயல்பாகவே இங்கு வெடித்த சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை தாங்கினர். கற்றோர் குழாமுக்கும் அது தேவையாக இருந்தமையினால் அவர்கள் அதற்கு தலைமை தாங்கினர்.

இவ்அரசியல் தலைமைக்கு புறம்பாக தேசியத் தலைமை ஒன்று வளர்ந்து வந்தது. அது அரசியல் மட்டத்தில் தோன்றுவதற்குப் பதிலாக. மத கலாசார மட்டத்திலேயே தோற்றம் பெற்றது. அநகாரிக தர்மபாலா, ஆறுமுக நாவலர் போன்றவர்கள் இந்தவகையில் முன்னணியில் நின்றனர். இவர்கள் காலனித்துவ ஆட்சிக்கு எதிராக பிரச்சாரத்தையும் போராட்டங்களையும் நடாத்துவதற்குப் பதிலாக விளைவுகளுக்கெதிராகவே போராட்டங்களை நடாத்தினர். அநகாரீக தர்மபாலா கோல்புறூக்கினால் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டத்துறையினாலும் கட்டற்ற பொருளாதாரத்தினாலும் வருகை தந்த இந்திய வம்சாவளியினர், முஸ்லீம்கள் என்போருக்கெதிராகவே தனது பிரச்சாரத்தை முடுக்கியிருந்தார். இதனால் வளர்க்கப்பட்ட தேசியவாதம் காலனித்துவ ஆட்சிக்கெதிராக இருக்கவில்லை. மாறாக இலங்கையில் வாழும் ஏனைய தேசிய இனங்களுக்கு எதிரான பௌத்த சிங்கள தேசியவாதமாகவே இருந்தது. இந்தவகையில் பௌத்த சிங்கள தேசிய வாதத்தின் தந்தையாக அநகாரிக தர்மபாலாவே விளங்குகின்றார்.

இவர்களை விட அரசியல் மட்டத்தில் பூரண சுதந்திரக் கோரிக்கையை முன்வைத்த A.E.குணசிங்கா, விக்ரர் கொரயா போன்றவர்களும் சிங்கள மக்கள் மத்தியில் இருந்து எழுச்சி பெற்றனர். இவர்கள் பிரித்தானியரைச் சாராமல் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபட்டவர்களிலிருந்தே எழுச்சி பெற்றனர். மிகச் சிறிய தொகையினராகவும் பிரித்தானியரின் கெடுபிடிகளுக்கு உள்ளானவர்களாகவும் இருந்தமையினால் பிரித்தானியருக்கு சார்பான கற்றோர் குழாம் தலைமையை மீறி இவர்களால் வளர முடியவில்லை. 1915 இல் ஏற்பட்ட மக்கள் எழுச்சிக்கு இவர்களது




சேர். முத்துக்குமாரசுவாமி

* குமாரசுவாமி முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் மகனாக 1833இல் பிறந்தார்.
* கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்றார்.
* 1851 இல் றோயல் கல்லூரியில் திறமையான மாணவருக்கான பதக்கம் பெற்றார்.
* முல்லைத்தீவுப்பகுதி அரசாங்க அதிபராக நியமனம் பெற்றார்.
* 1856ம் ஆண்டு முதல் நியாயவாதியாக கடமையாற்றினார்.
* 1861முதல் சட்டநிரூபண சபையில் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவராக தமிழருக்கும், முஸ்லீம்களுக்குமாக நியமனம் பெற்றார்.
* 1862 இல் இங்கிலாந்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.
* இங்கிலாந்தில் வசிக்கும் ஆங்கிலேயப் பெண்ணான எலிசபத்கினே பீபீ என்ற பெண்ணை திருமணம் செய்தார்.
* இவருக்கு மகனாக பிறந்தவரே கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள்.
* 4-5-1874 இல் தனது 46 வயதில் மரணமடைந்தார்.

## சைவவேளாளமாக இருந்த தமிழ்த் தேசிய வாதம்

இளம் இலங்கையர் கழகமே தலைமை தாங்கியது.

தமிழ்மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியவாதத்தை கட்டியெழுப்புவதில் ஆறுமுகநாவலர் முன்னின்றார். இவரால் வளர்க்கப்பட்ட தேசியவாதம் சைவத்தமிழ்த் தேசியவாதமாகவே இருந்தது. இவரும் சிங்கள மததேசியவாதிகளைப் போல் காலனித்துவ ஆட்சிக்கெதிராக பிரச்சாரத்தையும் போராட்டத்தையும் முன்னெடுப்பதற்கு பதிலாக கிறிஸ்தவ மதத்திற்கெதிரான பிரச்சாரத்தையும் போராட்டத்தையுமே முன்னெடுத்திருந்தார். இதனால் தமிழ்க் கிறிஸ்த



சேர். யேம்ஸ் பீரிஸ்



சேர். பொன். அருணாசலம்



ஈ. டபிள்யூ. பெரேரா

வர்கள் இவரது போராட்டங்களிலிருந்து அந்நியமாகினர். இதைவிட இவர் தமிழ்மக்களின் உயர்சாதிப்பிரிவான உயர்வேளாளரைப் பிரதிநிதித்துவப் படுத்துவராகவும் சாதி பாகுபாட்டை ஆதரிப்பவராகவும் இருந்தமையினால் தமிழ் மக்கள் மத்தியில் வாழும், 'தாழ்த்தப்பட்ட' சாதியைச் சேர்ந்தவர்களும் இவரது போராட்டங்களிலிருந்து அந்நியமாகினர். இவருடைய திண்ணைப் பாடசாலைகளில் 'தாழ்த்தப்பட்ட' சாதியைச் சேர்ந்தவர் எவரும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. உண்மையில் 'தாழ்த்தப்பட்ட' சாதியினர் கொஞ்சமாவது அறிவியல்ரீதியாக வளர்ச்சியடைவதற்கு காரணகர்த்தாவாக இருந்தவை கிறிஸ்தவ மத நிறுவனங்களே.

எனவே தமிழ்த் தேசியவாதத்தின் தந்தையாக கருதக்கூடிய ஆறுமுகநாவலரின் தேசியவாதம் தமிழ்மக்கள் அனைவரையும் இணைப்பதற்கு உதவவில்லை. இந்நிலையில் சைவத்தமிழர் வேளாள தேசியவாதமாக இருந்த தமிழ்த் தேசியவாதத்தை பின்னாளில் தமிழ் தேசியவாதமாக உருவாக்கியதில் தமிழரசுக்கட்சிக்கும் அதன் தலைவர் செல்வநாயகத்திற்கும் குறிப்பிடத்தக்க பாத்திரம் உண்டு. (ஆயினும், தமிழரசுக்கட்சியோ செல்வநாயகமோ 'தாழ்த்தப்பட்ட' தமிழ் மக்கள் தேசிய வாதத்துள் இணைத்துக் கொள்ளுவதை தமது அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகக் கொண்டிருந்தார்கள் என கூறிவிட முடியாது) எனினும், தமிழ் கற்றோர் குழாம் எல்லாம் ஆங்கில மொழிக்கு வால்பிடித்துக் கொண்ட இந்த வேளை தமிழ் மொழியை உயர்த்திப் பிடித்து 'தமிழ்த்' தேசியவாதத்தை வளர்த்தவர் என்ற வகையில் ஆறுமுகநாவலருக்கு முற்போக்கான பாத்திரம் உண்டு.

மேற்கூறியவாறு ஆங்கிலம் படித்த கற்றோர்குழாம் தலைமை காலனித்துவ ஆட்சிக்கு வால்பிடிக்கின்ற பிற்போக்கான தலைமையாக இருந்த போதும் இவர்களில் ஒருவர் அவற்றிற்கு விதிவிலக்கானவராக இருந்தார். அவர்தான் சேர்.பொன் அருணாசலம் அவர்கள. இவர் அத்தலைமைக்குள் இருந்த போதும் காலனித்துவ ஆட்சிக்கு எதிராக பூரண சுதந்திரக் கோரிக்கையை வலியுறுத்துபவராகவே இருந்தார். இந்தியச் சுதந்திரப் போராட்டத் தலைவர்களில் ஒருவராகிய நேருவின் கொள்கைகளினால் கவரப்பட்ட இவர் நேருபோலவே வெள்ளையரை வெளியேற்றி சுயஆட்சியை அமைப்பதை கொள்கையாக கொண்டிருந்தார். அரசியலுக்கு அப்பால் தொழிலாளர் நலன்களிலும் இவர் அக்கறையுடையவராக இருந்தார். இலங்கையில் முதன்முதலாக தொழிற்சங்கத்தை உருவாக்கி தொழிற்சங்க இயக்கத்தின் முன்னோடியாகவும் விளங்கினார். இவரினால் கவரப்பட்ட ஒருவராகவே பிற்காலத்தில் தொழிலாளர் தலைவராக A.E.குணசிங்கா எழுச்சியுற்றார். இலங்கையின் கற்றோர் குழாம் தலைமை பௌத்த சிங்கள பேரினவாதத்தை அரசியல் கொள்கையாக வரித்துக் கொள்ள முற்பட்ட போது அத்தலைமையிலிருந்து வெளியேறி தமிழ்த்தேசிய இனத்துக்கு தலைமை தாங்கவென தமிழர் மகாஜன சபையை சேர்.பொன்.அருணாசலம் உருவாக்கினார்.

இந்த வகையில் தமிழ்த் தேசியவாதத்தின் தந்தையாக ஆறுமுகநாவலரைக் கருதினாலும் தமிழ்த் தேசியவாத அரசியலின் தந்தையாக அருணாசலத்தையே கருதமுடியும். துரதிர்ஷ்டவசமாக தமிழர் மகாஜனசபையை உருவாக்கி இரு வருடங்களுக்குள்ளேயே 1923 இல் அவர் மரணமுற்றதால் தமிழ்த் தேசியவாத அரசியலில் அவரின் காத்திரமான பங்களிப்பை பெற முடியாத நிலை ஏற்பட்டது.

கோல்புறூக்கினால் உருவாக்கப்பட்ட ஆங்கிலம் படித்த கற்றோர் குழாமிடம் ஆரம்பத்தில் இலங்கையர் என்ற வகையில் காலனித்துவத்திற்கு எதிரான தேசியவாதம் என்பது இல்லாததோடு இனரீதியான தேசியவாதம் கூட இருக்கவில்லை. இலங்கையின் நவீன ஆங்கிலேயரான இவர்களின் நோக்கம் காலனித்துவ ஆட்சியை அப்படியே தக்கவைத்துக்கொண்டு தாம் சார்ந்த வர்க்கத்திற்கு சில சலுகைகளை பெறுவதாகவே இருந்தது. இதனால் பௌத்த சிங்கள பேரினவாதம் மதவாதிகளினால் முன்வைக்கப்பட்ட போது இவர்கள் அதில் அதிகளவு அக்கறை செலுத்தவில்லை. ஆனால் காலப்போக்கில் பௌத்த சிங்கள பேரினவாதம் ஓர் அரசியல் ஆதிக்க சக்தியாக எழுச்சியடைய ஆரம்பித்த போது அது தங்களை அரசியல் தலைமையிலிருந்து தூக்கி எறிந்துவிடுமோ என அஞ்சினார்கள். வாக்குரிமை விஸ்தரிக்கப்பட விஸ்தரிக்கப்பட மேலும் மேலும் அஞ்சினார்கள். இதனால் அதற்கான அரசியல் தலைமை பெரிதாக வளர்ச்சியடையாத ஓர் நிலையைப் பயன்படுத்தி அதில் தாங்கள் ஏறிக்குந்திக் கொண்டார்கள். இதன் விளைவு இக்கற்றோர் குழாம் தலைமை இனரீதியாக பிளவுபட்டது. தமிழர், இந்தியவம்சாளியினர் என்போர் இதிலிருந்து வெளியேறி தத்தம் இனங்களுக்கு தலைமை ஏற்க முற்பட்டனர். அப்போது பௌத்த சிங்கள பேரினவாதத்தின் தலைமை கரையோரச் சிங்களவர்களிடம் இருந்ததினால் கண்டியச் சிங்களவர்களும் வெளியேறினர்.

இவ்வாறு கற்றோர் குழாம் தலைமை இனரீதியாக பிளவுபட்ட போது இதில் இருந்த பிற்போக்குத் தலைவர்களே அவ்வவ் இனங்களுக்கும் தலைமையேற்க முற்பட்டனர். இப்பிற்போக்கு அணியினர் தேசிய இனங்களுக்கு தலைமையேற்க முற்பட்டமையால் தேசிய இனங்களின் கோரிக்கைகளைக் கூட முற்போக்கான விதத்தில் இவர்கள் எடுத்துச் செல்லவில்லை. மாறாக தமது வர்க்க நலன்களுக்கு சாதகமாக எடுத்துச் சென்று சீரழித்தனர். தமிழ்த் தேசிய இனத்தைப் பொறுத்தவரை அருணாசலம் இதற்கு விதிவிலக்கானவராக இருந்த போதும் அவருக்கு பின் வந்த அருணாசலம் மகாதேவா, ஜீ.ஜீ. பொன்னம்பலம், நடேசன், கனகரத்தினம் போன்ற தலைவர்கள் இவ்வாறே செயற்பட்டனர். இதற்கு சிறந்த உதாரணம் டொனமூர் விசாரணைக் குழுவினர் முன்னிலையில் கண்டியத் தலைவர்களால் சமரஷ்க் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது அதனை இவர்கள் புறக்கணித்து நிராகரித்தமையாகும். எவ்வாறு முன்னைய கற்றோர் குழாம் காலனித்துவ ஆட்சியை ஏற்றுக் கொண்டு சலுகைகளை வேண்டி நின்றார்களோ அதே போல் இவர்களும் காலனித்துவ ஆட்சியையும் பௌத்த சிங்கள பேரின மேலாதிக்கத்தையும் ஏற்றுக் கொண்டு அதற்குள் சலுகைகளை வேண்டி நின்றார்கள்.

(வரும்)

நன்றி - நூலகத்திட்டம்



எனக்கோ உடம்பு முழுவதும் புல்லரிப்பு. வேகம், உத்வேகம்.

இரத்த நாளங்கள் தடிப்பாய் புடைத்து நின்றன. என் உடம்பில் பாய்ந்து கொண்டிருக்கும் சிவப்பு நிற இரத்தம் சூடேறியது. கைகளிலும் கால்களிலும் உள்ள மயிர்கள் குத்திட்டு நின்றன. உடம்பின் சதைகள் முறுக்கேறின. என்னைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியாது.

என் காதில் விழுந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு வார்த்தைகளும் என்னை உணர்ச்சி யூட்டின. உடம்பு படபடக்க ஆரம்பித்தது. எனினும் உடலில் ஏற்பட்டுள்ள உணர்ச்சி வேகம் நிற்குமாப் போல் தோன்றவில்லை.

மின்சாரத் தாக்குதல் ஏற்பட்டது போல.

''ஆஹா ....ஹா.....ஹா.....''

இனிச் செயலில் இறங்குவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. யாரைப்பற்றியும் இனி நான் கவலைப்படப் போவதில்லை. எனது தேவை, எனது ஆசை, எனது வெறி, எனது புது இலட்சியம் என்று கூடச் சொல்லலாம்.

''அப்போ எனக்கு சுதந்திரம்?...

''முட்டாள்! உனக்கு இன்னுமா புரியவில்லை?...''

''புரிந்தும் புரியாத மாதிரித்தான்....''

''முடியாது -உன்னைத் திருத்தவே முடியாது...'

''நான்...''

''சொல்லத்தேவையில்லை. அதைப்பற்றி. இரவு முழுவதும் சிந்தனை செய். நாளை இரவைக்கு வா. அப்போதாவது உனக்கப் புரிகிறதா என்று பார்ப்போம்.''

''அது வந்து...''

''கெட் அவுட்...''

ஓ....நான் ஏன் இப்படி முட்டாளாய்ப் போனேன். எனக்கு இன்னும் புரிய வில்லையாமே. நான் என்ன முட்டாளா? அப்படித்தான் அவர்கள் நினைத்திருக்கக்கூடும் ஆனால் படிக்கும் போது என்னை எல்லோரும் கெட்டிக்காரன் என்றுதான் சொன்னார்கள். அவர்கள் தான் முட்டாள்கள்.

அவர்கள் முட்டாள்களானால் எனக்குப் பரவாயில்லை. அவர்களால் நானுமல்லவா முட்டாள் போலாகி விட்டேன். எதுவுமே விளங்காமல், எதையும் புரிந்து கொண்டு வரும்பொழுது புரியாமல் போய் விடுகின்றது. ஏன் இப்படி நடக்கின்றது. அதுகூடப் புரியவில்லை.

நேற்றிரவு கூட இதுமாதிரித்தான் நடந்தது. நேற்றிரவு மட்டுமல்ல. சில நாட்களாகவே இப்படித்தான் நடக்கின்றன. நாளையும் இப்படியே நடந்து விட்டால்?.. நிச்சயம் நான் முட்டாள் தான். றமி கூட என்னை அடிக்கடி ''பைத்தியம்'' என்று சொல்வாள். அது கூடப் பரவாயில்லை. அது அன்பினால் சொல்லப்பட்டது. அதை விடவும், முட்டாள் என்பதை விட பைத்தியம் என்பது மிக நல்லதொரு சொல்லாகும்.

சுற்று முற்றும் பார்த்து யாரும் வராத வேளை பாதையில் இறங்கி நடக்க ஆரம்பித்தேன். பௌர்ணமி நிலவு வர இன்னும் பதினான்கு நாட்கள் காத்திருக்க வேண்டும். முகம் தெரியாத இருட்டு. அதுவும் ஒரு வகையில் நல்லது தான். நடப்பது கடினமாக இருந்த போதிலும் இருட்டு எனக்குப் பாதுகாப்பானது.

இதுவெல்லாம் றமிக்குத் தெரிந்தால் என்னை ஒரேயடியாக வெறுத்து விடுவாள். அவளுக்கு இதுவெல்லாம் சற்றும் பிடிக்காத சங்கதிகள் அவள் இவைகளைத் தாங்கிக் கொள்ளப் போவதில்லை. வார்த்தைகளைக்கூட எல்லை மீறிப் பேசுவது அவளுக்குப் பிடிக்காது. அவள் சாதாரணத்தை மீறி அசாதாரணமாகப் பேசும் ஒரேயொரு வார்த்தை, என்னைப் பார்த்து பைத்தியம் என்று சொல்வது மட்டும் தான்.

அவள் அப்படிச் சொல்லும் போதெல்லாம் எனக்கு ஆத்திரம் வருவது கிடையாது. அதை விடவும் அவள் என்னைப்பார்த்து எதைக் கூறினாலும் எனக்கு ஆத்திரம் வரப்போவதில்லை. றமி கண்களால் தரும் அன்பைப்பார்த்து எனக்கு எப்படி ஆத்திரம் வர முடியும். ஆனால் நான் இப்போது சென்று வரும் இடத்தில் அன்பு அன்பாய்த் தரப்படுவதில்லை என்று தான் நினைக்கிறேன். ஆனாலும் அதுபற்றி எனக்குச் சரியாகத் தெரியாது. ஒருவகை மாயை போலத் தான் எல்லாம். அல்லது அங்கே சொல்லப்படுவது போல நான் முட்டளாகத் தான் இருக்க வேண்டும்.

வீட்டுக்குள் நுழைவது தான் இனி வரும் மிகப் பெரிய பிரச்சினை. எல்லோரும் சேர்ந்து என்னை வார்த்தையாலே கொட்டி விடுவார்கள். அவர்களுக்கு கொட்டுவதற்குக் கொடுக்கத் தேவையில்லை. முகக்கடுப்பை பார்ப்பது என்றாலே எனக்கு அலர்ஜி. ஆனால் அதைத் தான் எல்லோரும் காட்டுவார்கள். அவர்களின் முகங்கள் அனுபவமில்லாத சிற்பி செதுக்கிய சிலை முகங்கள் மாதிரி இருக்கும். ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியாத மறுமை நாளை விட இது கொடிது. அப்படித்தான் இருக்க வேண்டும். நிச்சயம் இல்லை. இப்பொழுது எனக்கு எதுவுமே நிச்சயமில்லாமல் தான் போகின்றது.

இரவு வந்தால் நான் பொருத்தமற்ற நேரங்களில் சுற்றித் திரிவதாக அவர்கள் முறைப்பாடு செய்வார்கள். அதற்காக என்னால் எதுவுமே செய்ய முடியாது. எனக்கு இரவில் தான் நேரம் தரப்படுகின்றது. அதுவும் பத்து மணிக்குப் பிறகு தான். அதுதான் பொருத்தமான நேரமும் கூட இருந்தாலும் இன்னும் பிரயோசனம் ஏற்படவில்லை. இன்னும் புரிந்தும் புரியாத முட்டாளாக இருக்கிறேன். என்னை யார் முட்டாள் ஆக்கினார்கள்.




கதவு பூட்டப்பட்டிருந்தது. பூட்டப்படாத வரைக்கும் எந்த நேரமும் வீட்டினுள் நுழைந்து விடலாம். பூட்டப்பட்டிருந்தால் அது முடிவதில்லை. தயக்கத்தடன் கதவைத்தட்ட, அது திறந்து கொண்டது. என்னை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களுக்கு என்னை இழந்துவிட சிறிதளவேனும் விருப்பமில்லை. நான் உள்ளே சென்றதும் மிக வேகமாகக் கதவு அடைக்கப் பட்டது. என் பழக்கவழக்கங்கள் நல்லதில்லை என்று சொல்லும் அளவுக்கு-அடைக்கப்பட்ட சத்தம் வந்தது. வாயால் சொல்லிச்சொல்லி ஓய்ந்து போய் விட்டார்கள்.

காலை எழுந்து முதல் வேலையாக றமியின் வீட்டுக்குத்தான் சென்றேன். அங்கே வாசலில் அவள் மட்டும் தான் நின்றாள். அவளின் கண்களில் அன்பைக் காணவில்லை. ஆத்திரம் தான் தெரிந்தது. அவளின் ஆத்திரத்தை மட்டும் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது அது அவளுக்கும் தெரிந்த விடயம் தான். கதிரை ஒன்றில் அமர்ந்து கொள்ளக் கூட் மனம் இடம் தராமல் அப்படியே நான் நின்று கொண்டிருந்தேன்.

எப்படியும் நான்கு நிமிடங்கள் அப்படியே நின்றிருப்பேன். றமி கூட எதுவும் பேசவில்லை. ஏன் என்று எனக்குத் தெரியாது. ஆனால் காரணத்தை கேட்கும் தைரியம் எனக்கு ஏற்படவும் இல்லை. குற்றமுள்ள நெஞ்சமாகையால் தயக்கம் தானாகவே வந்தது. இனியும் பொறுத்துக் கொள்ள என்னால் முடியவில்லை.

''றமீ....''

''............''

''றமீஸா....'

''............''

அவள் கண்களில் இருந்து கண்ணீர் எல்லை மீறி ஓடிக்கொண்டிருந்தது. அவளின் ஆத்திரத்தை என்னால் தாங்க முடியாத போதும், அவளின் அழுகை எனக்கு ஆத்திரத்தை ஊட்டியது. அதனை என்னால் தவிர்க்கவும் முடியாதிருந்தது.

''றமீ....எதுவானாலும் சொல்லிவிட்டு அழுங்க....''

''எதைச் சொல்ல... நீங்க போற போக்கு எனக்குப் பிடிக்கல்ல....''

''நீங்க எதப்பத்தி சொல்றீங்க?...''

''எனக்கு எதுவுமே தெரியாது என்றுமட்டும் நெனக்காதீங்க. தெரியும். எனக்கு எல்லாமே தெரியும். உங்க உம்மா வந்து எல்லாத்தையும் சொன்னாங்க....அழுதாங்க...நீங்க எல்லோரையும் அழ வைக்கிறீங்க.... என்னையும்.... ஏன் இப்படி....நானொருத்தி இங்க இருக்கிறத நீங்க மறந்திட்டீங்களா?...''

புரிந்து விட்டது. எனக்கு எல்லாமே புரிந்து விட்டது. மனிதர்கள் எல்லோருமே சுயநலக்காரர்கள் தான். உம்மா, றமி, நான்கூட; உலகத்தில் இருக்கின்ற எல்லோருமே. றமிஸாவை மறந்திடு, அவளின் வீட்டுக்குப் போகாதே என்று என்னைச் சித்திரவதைப்படுத்தும் உம்மா; அதே றமிக்கிட்ட வந்து என்னைப் பற்றி...? .சீ என்ன உலகம்.

சுயநலம் மனிதனின் முடிவு காணாத தொடலியா அல்லது முடிவிலியா? ஆம்! உலகின் முடிவிலியே தான் சுயநலம்.

இனி இங்கிருப்பதில் பயனில்லை. றமி எதனையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. கொந்தளிக்கும் கடல் தானாகத்தான் அமைதியடைய வேண்டும். அதனை அமைதிப்படுத்த முடியாது அது கொந்தளித்துக் கொண்டே இருக்கட்டும். பின்னொரு நாள் தானாக அமைதி கொள்ளும்.

''றமி நான் போய்ட்டு வாரன்...

''போங்க...வராதீங்க..நீங்க விட்டிருங்க, எல்லாத்தையும் விட்டிருங்க. அதுக்கப்புறம் நான் உயிருடன் இருந்தால், என் ஞாபகம் உங்களுக்கு இருந்தால் அப்ப என்ன வந்து பாருங்க...''

இடையில் நீண்டதோர் பெருமூச்சு விட்டாள்.

''பிளீஸ்..எல்லாத்தையும் விட்டிருங்க. அது உங்களுக்கு வேண்டாம்...''

அமைதியாக வெளியேறி நடந்தேன்.

இனி நான் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். மீண்டும் மீண்டும் சிந்திக்க வேண்டும். நிலைக்கண்ணாடியில் பார்ப்பது போல என்னை நானே தூரத்தில் நின்று பார்க்க வேண்டும். றமி என்னை ஒரேயடியாக நிராகரித்து விட்டிடுவாள் என்றால்...? அது என்னால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு சங்கதியாகத்தான் இருக்கும்.

இப்படித்தான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கடங்கல்கள். இன்று கூட என்னை முட்டாள் என்று கூறிவிடுவார்களா? கோழை என்று கூட சில வேளை சொல்லுவார்கள். ஏன் அது அப்படி. இன்னும் நான் தொட்டுக் கூடப் பார்க்கவில்லை. தொட முயன்றால் என் கைகள் உதறல் எடுக்கின்றன. தொட்டுவிட்டால் அதனை விட்டும் என்னால் மீளவே முடியாது போய் விடும். ஆனாலும் இவ்வளவுக்கும் பிறகு தொடாமல் இருப்பது முடியுமான காரியமா. என்னால் மறந்து விடத்தான் முடியுமா?

மறக்க முடியும். ஏன் முடியாது. இனி நான் அங்கே போவது இல்லை. பல இரவுகளாக நான் போய்ப்பட்ட அவதிகளுக்கு ஒருமுடிவு காண வேண்டும். எனக்கு எனது றமி தான் வேண்டும். எனது குடும்பம் தான் வேண்டும். நான் அங்கே போகப் போவதுமில்லை. என் மனதை சலனப்படுத்திக் கொண்டிருந்த அதைத் தொடப் போவதுமில்லை.

இருள் சூழ ஆரம்பித்தது. பத்து மணி நெருங்கிக் கொண்டிருந்தது.

இரத்த நாளங்கள் தடிப்பாய் புடைத்து நின்றன. என் உடம்பில் பாயும் சிகப்பு ரத்தம் சூடேறியது. கைகளிலும் கால்களிலும் உள்ள மயிர்கள் குத்திட்டு நின்றன. உடம்பின் சதைகள் முறுக்கேறின. இனிமேலும் என்னைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியாது.

மின்சாரத் தாக்குதல் ஏற்பட்டது போல.

''ஆஹா...ஹா...ஹா....''

றமி வெறும் காதலி தானே. அவள் போனால் இன்னொரு காதலி. காதலி கிடைக்காவிட்டால் ஒரேயடியாக மனைவி. அதுவும் முடியாவிட்டாலும் பரவாயில்லை. திருமணம் செய்வதால் பெரிதாய் எதை சாதித்து விடப்போகிறேன். இன்று எதைத்தான் பணம் கொடுத்து வாங்க முடியாமல் இருக்கின்றது. ஒரு காதலியைக் கூட வாங்கலாம். என்னைச் சலனப்படுத்தும் அதையும் பணம் கொடுத்துத்தான் வாங்க வேண்டும். எனக்கு அது இலவசம். இருந்தும் என்ன? என்னால் தொடப் பயமாக இருக்கின்றது. ஒரே உதறல் தான். நான் எப்படி முட்டாளாகிப் போனேன்.

அங்கே போனபோது எல்லோரும் என்னை இளக்காரமாய்ப் பார்த்தார்கள். எனது உடம்பு கூசிப் போயிற்று. அவர்கள் பேசுவதை இனியும் என்னால் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை

என் காதில் விழுந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு வார்த்தைகளும் என்னை உணர்ச்சி யூட்டின. உடம்பு படபடக்க ஆரம்பித்தது. எனினும் உடம்பில் ஏற்பட்டுள்ள உணர்ச்சி வேகம் நிற்குமாப் போல தோன்றவில்லை.

றமி என்பவள் ஒரு தூசு.

தலைவர் சொன்னார் போராட்டம் பற்றி-

எனக்கோ உடம்பு முழுவதும் புல்லரிப்பு. வேகம். உத்வேகம். இனியும் என்ன நான் தொடப் பயந்ததைத் தொட்டேன். நானே மாபெரும் வீரனானேன். பெற்றோர் போனார்கள் சொத்துப் போயின. நண்பர்களும் போனார்கள். றமி கூடட் போய் விட்டாள்.

பின்னொரு நாள்-

அது குண்டுகள் அற்று வெறுமையாய்க் கிடந்தது. எனது நெஞ்சம் சிகப்பு நிறமாய் வடிந்தது.

நான் எங்கே...நான் எங்கே...என்னுயிர்..என்னுயிர்....என்....

நன்றி - நூலகத்திட்டம்



# நைஜீரியாவில் நடந்த உள்நாட்டு யுத்தம்!

## பயாஃவ்ரா தனிநாடு

## தோன்றி மறைந்தது ஏன்?

சிசைரோ

தமிழ் இயக்கங்களில் ஏதோ ஒன்றின் பிரமுகர் எப்போதோ பேசியதாக ஞாபகம் ''ஈழப் போரும் நைஜீரியாவின் பயாஃவ்ராப் போர்போல முடிவடையும் அபாயம் உள்ளது. ஜனநாயக வழிக்குத் திரும்பி விடுதல் நன்று''. இப்படி அந்தப் பேச்சு அமைந்திருந்தது. ஈழப்போருக்கும் பயாஃவ்ராப் போருக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வதே இங்கு எனது நோக்கம். ஆராய்வு பக்கங்கள் அனுமதிக்கும் அந்தளவுக்கே.

1967மே மாதம் 30ம் திகதி அன்று நைஜீரியாவின் கிழக்குப் பிராந்தியம் தன்னை ''Biafra'' என்ற தனிநாடாகப் பிரகடனப்படுத்திற்று. சுமார் ஒரு வருடத்துக்குத் தனியாட்சி வெற்றிகரமாக நடைபெற்றது. ஆனால் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்து நைஜீரியாவின் ஏனைய பகுதிகள் முழுவதும் சேர்ந்து பயாஃவ்ராவுக்கு எதிராகப் போர் தொடுத்ததில் புதிய நாடு 1970 ஜனவரியில் நைஜீரியாவிடம் சரணடைந்தது. மூன்றாண்டுகள் நடந்த யுத்தத்தில் ஏற்பட்ட உயிரழிவும் பொருட்சேதமும் ஏராளம். கிழக்குப் பகுதி சுடுகாடாக மாறியது. பயாஃராவ் சிறுவர்கள் பட்டினிச் சாவுக்கு இரையாகினார்கள். இனம் அழியும்; பிரதேசம் இனி எதற்குமே பயன்படாது என்ற நிலை ஏற்பட்ட போதே புதிய நாடு சரணடைந்தது.

ஆனாலும், பயாஃவ்ராப் போரை சிறுபான்மையினரது உரிமைப் போராட்டம் என்றோ, சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் என்றோ அடையாளப்படுத்துவது அடிப்படையிலேயே தவறானதாகும். ஆபிரிக்க நாடுகளின் வரலாற்றில், குறிப்பாக நைஜீரியா தந்த பாடம் இனத்துவ ஆய்வுகளுக்கு உதவும் ஒன்றேயாயினும் இதனை பிரிவினைப் போராட்டங்களுக்கு நேர்மறை/எதிர்மறை உதாரணமாகக் கொள்ளுதல் தவறானதாகும். ஆனாலும் இப்போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் உள்நாட்டு யுத்தங்களில் சம்பந்தப்பட்டோருக்கு தகுந்த பாடங்களைத் தரும் என்பதை மறுப்பதற்கில்லை.

### வரலாற்றுப் பின்னணி

ஆபிரிக்கக் கண்டத்திலேயே அதிக சனத்தொகை கொண்ட நாடு நைஜீரியா. இதன் இன்றைய சனத்தொகை சுமார் 15கோடி. மொத்தமாக 250 இனக் குழுக்கள் இங்கே உள்ளன. இனம், மொழி, மதம், கலாசாரம் என்பவற்றால் ,வேறுபட்டு நிற்பன இவை. இவற்றுள் கௌசா, யொரூபா, இபோஸ் என்பனவே பிரதான மூன்று இனக் குழுக்கள். இவை ஒவ்வொன்றினுள்ளும் நிறையவே துணைக்குழுக்கள். நைஜீரிய மக்களில் ஆகக்கூடிய எண்ணிக்கையினர் கௌசா மக்களே. இவர்களில் பெரும்பாலோர் முஸ்லீம்கள். நாட்டின் வடபகுதி இவர்களுடைய பிரதேசம்.

உண்மையில் நைஜீரியா என்றொரு நாடு 1914க்கு முன்பு இருந்ததாகக் கூற முடியாது. மேற்காபிரிக்காவை விட்டு வெளியேறும் எண்ணத்துடனிருந்த பிரிட்டிஷார் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டதன் பின் இந்த மூன்று இனக்குழுக்களுடனும் படிப்படியாக உடன்படிக்கைகள் செய்து கொண்டு நைஜீரியா என்றொரு நாட்டை 'உருவாக்க' முற்பட்டனர். 1897 இல் யொரூபா இனத்தவருடன் உடன்பாடு. 1901-03 காலப்பகுதியில் வடபகுதிக் கிளர்ச்சியை அடக்கி அப்பிராந்தியத்தை றோயல் நைஜெர் கம்பனிகளின் நிர்வாகத்தின் கீழ் ஒப்படைத்தனர். 1914 இல் கௌசா, யொரூபா இனத்தவர்கள் ஒன்றிணைக்கப்பட்டு நாடு உருவாகியது. ஆனாலும் பண்பாட்டுக் கோலங்கள் சங்கமிக்காத ஒருமைப்பாடு இது. மனங்கள் ஒன்றவில்லை. பிரிட்டிஷார் இழுத்துப் பூட்டி ஏற்படுத்திய ஒற்றுமை.

1946 இல் புதிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்ட போது வடபகுதி மக்கள் தாங்கள் அமுக்கப்பட்டு விடுவோமோ என நியாயமான அச்சங் கொண்டனர். இந்த யாப்பின் கீழ் மூன்று இனக்குழுக்களுக்கும் மூன்று மாநில அரசுகள் ஏற்படுத்தப்பட்டன. மத்திய அமைச்சரவையிலும் மாநிலங்களுக்குச் சம எண்ணிக்கையிலேயே பதவிகள் வழங்கப்பட்டன. ஆனாலும் 1954 வரை நைஜீரியாவில் சமஷ்டி ஆட்சி நிலவியதாகக் கூறமுடியாது. புதிய தேர்தல் 1959 இல் நடந்த போது கௌசா இனத்தவரே மத்திய அரசாங்கத்தை அமைத்தனர். 1960 ஒக்டோபர் 1 இல் நாடு சுதந்திரமடைந்தது. 1963 இல் தன்னைக் குடியரசாக்கிக் கொண்டது.

நைஜீரியாவின் மூன்று பிரதான இனக் குழுக்களிலும் எல்லாவிதத்திலும் முன்னணி வகித்த இனம் இபோஸ் ஆகும். நாட்டின் தென்கிழக்குப் பிராந்தியம் இவர்களுடையது. ஜொரூபா இனத்தவர்களது பிராந்தியம் தெற்குப்பகுதியாகும். பூகோள அமைப்பின்படி, தெற்குப் பகுதியினூடாகவே ஐரோப்பியக் கலாசாரம் நாட்டுக்குள் ஊடுருவ வேண்டியிருந்தது. முதலில் யொரூபா இனத்தவரும் பின்னர் இபோ மக்களும் மேற்கத்தைய அலைகளினால் மூழ்கடிக்கப்பட்டுவிட வடக்கு மக்களான கௌசா இனத்தவர் மட்டும் அணை போட்டுத் தடுத்து அந்நியக் கலாசாரம் நுழைந்து விடாதபடி செய்தனர். இவ்விதத்தில் 1804-26 காலப்பகுதியில் இம் முஸ்லீம்கள் நடாத்திய 'புனித யுத்தம்' குறிப்பிடத்தக்கதே.

### வேற்றுமைகளின் போராட்டம்

கல்வி, தொழில் வாய்ப்பு, மதமாற்றம் என்பவைகளில் இபோ இனத்தவர்கள் யொரூபாக் குழுவினரை முந்திக் கொண்டனர். எண்ணிக்கையின் படி இபோ இனத்தவர் மூன்றாம் இடத்திலேயே இருந்தனர். ஆனால் வளமற்ற கிழக்குப் பகுதியில் பிறந்து வளர்ந்த காரணத்தால் இயல்பாகவே குடிகொண்டு விட்ட உற்சாகமும் சுறுசுறுப்பும் இபோ மக்களைத் 'திரைகடலோடித் திரவியந் தேடுபவர்களாக' மாற்றிவிட்டது. நைஜீரியாவின் வடக்கே வளம் நிறைந்திருந்ததால் இபோ மக்கள் கடல்கடக்காமல் வடக்கே போய் கௌசா மக்களிடையே வாழ்ந்து வளந்தேடினர். தேடிய 'வளங்கள்' கிழக்கு நோக்கித் திரட்டிக் கொண்டு வரப்பட்டன. ஆனால் கௌசா மக்கள் இதைப் பற்றிக் கவலைப்படவில்லை. மாறாக இபோ மக்கள் கொண்டுவரும் கல்வி, கலாசாரம் என்பவற்றால் தமது பழமைவாதப் பண்பாடுகள் சீர்குலையுமே என்றுதான் கௌசா இனத்தவர் கவலைப்பட்டனர். ஒன்றுபட்ட நைஜீரியா என்பது படிப்படியாக தெற்கத்தையர் வடக்கின் மீது அதிகாரஞ் செலுத்த வழி சமைக்கப்படப் போகிறது என்பதை உணர்ந்தவுடனேயே கௌசாக்கள் அரசியலில் கவனஞ் செலுத்தத் தொடங்கினர். ஆக, இந்த வேற்றுமை முளை 1914 இலிருந்துதான் புதிய பரிமாணம் பெற்றதெனக் கூற வேண்டும்.

பிரிட்டிஷாரின் வழக்கமான தந்திரப்படி மோதலை மும்முனையப்படுத்தினர். தெற்கே இபோ மக்களும் யொரூபாக்களும் ஒன்றிணையாதவாறு பார்த்துக்கொண்ட பிரிட்டிஷார் வடக்கிலுள்ள கௌசாக்கள் தெற்கிலுள்ள இரண்டு குழுக்களில் எதுவேனும் ஒன்றுடன் உறவு கொள்ளாதவாறும் 'அக்கறையுடன்' பார்த்துக் கொண்டனர். இதனால் சுதந்திரம் பற்றிய பேச்சு இழுபட்டுக் கொண்டு போயிற்று. அதே வேளை நாட்டில் ஆங்காங்கே இபோ இனத்தினருக்கு எதிரான வன்செயல்களும் நிகழத் தொடங்கின. அரசாங்கப் பதவிகளில் முக்கியமானவற்றில் இபோ மக்கள் வியாபாரத்தில் இவர்களே முதலிடம். அவர்களது நகர்வு (Mobility)விருப்புக் காரணமாக 'அங்கிங்கெனாதபடி' நிறைந்து காணப்பட்டமையும் தாக்குதலை இலகுவாக்கிற்று.

ஆக, கௌசா மக்களைப் பொறுத்தவரையில் இபோ இனத்தவர் இரட்டிப்பு ஆபத்தானவர்கள். பொருளாதாரத்தைச் சுரண்டும் திறனும் அரசியலை ஆக்கிரமிக்கும் அறிவும் கொண்டவர்களைப் படிப்படியாகத் தணிக்கை செய்ய வேண்டிய கடப்பாடு தமக்கு அவசியமாயிற்று என்று கௌசா மக்கள் கருதினர். 1945 இலேயே இனக்கலவரங்கள் ஆரம்பித்திருந்தன. இடைக்கிடை வடபகுதியினர் தாமே பிரிந்து போய் தனி நாடு அமைக்கப் போவதாகவும் அச்சுறுத்தினர். ஆனாலும் கடைநிலை இராணுவ வீரர்களின் ஆதரவின்மையும் பிரிட்டிஷ், அமெரிக்க இராஜ தந்திரிகளது ஆலோசனைகளும் பிரிவினையைத் தடுத்து விட்டன. 'ஒரே நைஜீரியாவுக்குள் உங்களை உயர்த்துங்கள்' என்பது அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆலோசனை. ஒன்று உயர்த்துவதற்கு, மற்றையது தாழ்த்தப்பட வேண்டியிருந்தது. எனவே தாக்குதல்கள் பெருகின. 1953, 1966 வருடங்களில் நடந்த வன்முறைகள் மிகமோசமானவை.

ஒப்பீட்டளவில் நைஜீரியாவில் 1966 என்பது இலங்கையில் 1983 ஆம் வருடமேதான். இபோ மக்களில் உயர்தொழிலாளர்களும் அரசாங்கத்தில் முக்கிய பதவிகலுள்ளோரும், வியாபார முன்னோடிகளும் அவர்களது உடைமைகளும் குறிவைத்துத் தாக்கப்பட்டு 'கிழக்கே போங்கள்' எனத் ''தாயகம்'' நோக்கி விரட்டப்பட்டனர்.

### அதிகாரப் போராட்டமா -உரிமைப் போராட்டமா?

சனத்தொகை மிகுந்த யாழ் குடாநாட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்காமல் முழு இலங்கையிலும் 'வியாபித்து' உழைக்க விரும்பிய மக்கள் எப்படி பிரிவினைக் கோஷத்தை முன்வைக்க நேர்ந்தது? 'ஒரே நைஜீரியா'வில்தான் தாங்கள் சுதந்திரமாகவும் வளமாகவும் வாழ முடியும் என நம்பிய இபோ மக்கள் கிழக்குக்குள் முடங்கிப் போகும்படி விரட்டப்பட்டனர். நைஜீரியா எங்களுடையது எனக் கருதிய மக்களுக்கு -இல்லை- கிழக்கு மட்டுமே உங்களுடையது எனச் சொல்லாலும் (வன்)செயலாலும் உணர்த்தப்பட்டது. 'Biafra' நாடு பிறக்கும் வரை இபோ மக்கள் தம்மில் 50,000 பேரைப் பலி கொடுத்து விட்டனரென்று கூறப்படுகிறது.

பின்தங்கிய பிரதேசத்திலுள்ள முன்னேறிய குழுக்கள் கடைசி ஆயுதமாகவே பிரிவினையைக் கோர விரும்புவார்கள் என்பதற்கு இபோ மக்களும் ஈழத் தமிழரும் ஆய்வாளர்களுக்கு அரிய உதாரணமாகின்றார்கள். கிழக்கு நைஜீரியா, மண்ணரிப்பால் பாதிக்கப்பட்ட வளமற்ற பூமி. யாழ்ப்பாணத்தில் இயற்கை வளம் காண 50அடிக்குமேல் நிலத்தைத் தோண்ட வேண்டும். யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் 1920களில் காண விரும்பிய இலங்கை பின்னர் தமிழர்களுக்குக் கனவாகிப் போனது போலவே நைஜீரிய தேசியவாதத்தை வளர்த்த இபோ மக்களுக்குப் பாராபட்சமும் ஒடுக்குமுறையும் பரிசாகக் கிடைத்தன. இரு இனங்களைப் பொறுத்தளவிலும் அவர்களை வீடு நோக்கித் திரும்பி வர வைத்தமை பாரபட்சமும் திட்டமிட்ட வன்முறைகளுமே. இந்தக் கட்டத்தில் இக் குழுக்கள் 'ஒரேநாடு' பற்றிய தமது கனவுகளைக் கலைக்க வேண்டி நிர்ப்பந்திக்கப்படுகின்றன.

நைஜீரிய இராணுவத்தில் கணிசமான அளவு அதிகாரிகள் இபோ இனத்தினரே. 1966 ஜனவரியில் இவர்கள் நான்கு மாநில அரசாங்கங்களையும் (வடக்கு, மேற்கு, தென்கிழக்கு, மத்திய மேற்கு) மத்திய அரசாங்கத்தையும் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றினர். இந்த நிலைப்பாட்டை இலங்கையில் தமிழர்கள் எடுத்திருக்க முடியுமா என்பதைச் சிந்தித்தல் வேண்டும். போராட்டங்களை ஒப்பிடுமுன் அவற்றின் பின்னணி நன்கு ஆராயப்படல் வேண்டும்.

ஆட்சி இபோ இனத்தவர் கைகளில் வந்ததும் இராணுவக் கிளர்ச்சிகளும் வன்முறைகளும் விசுவரூபமெடுத்தன. மே மாதத்தில் இராணுவ ஆட்சியினர் சமஷ்டி முறைக்கு முடிவு கட்டிவிட்டு இரும்புப் பிடியாக மக்களை அமுக்கினர். அமுக்கியவர்கள் யார்? நாட்டின் சனத்தொகையில் மூன்றாவது இடத்திலிருந்த இபோ இனத்தினர். இதனால் இதே மாதம் நாடு முழுவதிலும் தாக்குதலுக்கு உள்ளானார்கள். கிழக்கு நோக்கிய ஓட்டம் வேகம் பெற்றது. யூலையில் கௌசா இராணுவத்தினர் சதிப்புரட்சியை மேற்கொண்டு இபோ இனத்து இராணுவ அதிகாரிகளையும், சிவில் சேவையாளர்களையும் கொன்றனர். இனம் சுத்திகரிப்பு மேல்மட்டத்திலிருந்து கீழ் நோக்கி நகர்ந்தது. இபோ தளபதி Aguiyi Ironi கொல்லப்பட்டார்.' செப்டெம்பர் ஒக்டோபர் மாதக் கலவரங்கள் சிறப்பான திட்டமிடலுடன் அரங்கேற்றப்பட்டன. கிழக்கே வந்து சேர்ந்த இபோ மக்களது எண்ணிக்கை பத்து லட்சத்தையும் தாண்டி விட்டது. நைஜீரியாவின் வேறெந்தப் பகுதியும் இபோ மக்களுக்குப் பாதுகாப்பானதல்ல என்பது நிறுவப்பட்ட பின்னரேயே கிழக்கைத் தமது தாயகம் என்று பாதுகாக்கும் அவசியம் இந்த மக்களுக்கு ஏற்பட்டது. உணர்வலைகள் உயர எழுந்தன.

1983 ஆடி நிகழ்வுகள் இலங்கையில் ஏற்படுத்திய அதே உணர்வலைகள். இந்த ஒற்றுமை மிக அதிசயமானது. 'எமது பிராந்தியத்தைக் கைவிட்டால் எமது பாதுகாப்புக்கு நிரந்தர ஆபத்து' என்பதும் 'ஓடியோடி உழைத்துப் பொருளனுப்புதல் மட்டும் எமக்கு எதிர்காலத்தை நிச்சயப்படுத்தாது' என்பதையும் இபோ மக்கள் உணர்ந்து விட்டார்கள் என்பதில் ஆச்சரியப்படவோ, தவறு காணவோ முடியாது. ஆனால் 'ஏக நைஜீரியா' என்பதை வலியுறுத்தி இணைப் புரட்சி கண்ட மக்கள் அதே முறைமை மீது நம்பிக்கை இழந்து சத்திரசிகிச்சைக்கு ஆயத்தமானதுதான் துரதிர்ஷ்டவசமானது. நாட்டைக் கட்டியெழுப்பியவர்கள் அறுவடை நேரத்தில் அடித்து .விரட்டப்பட்டு விட்டதன் கொதிப்பினால் இந்த முடிவு நோக்கி உந்தப்பட்டிருக்கலாம். வன்முறையின் சேத அளவில் ஒப்பிட்டால் 1983யூலை நமக்குத் தந்த அழிவை விட 1966 பிற்பகுதி இபோ மக்களுக்குக கொடுத்த சேதம் பன்மடங்கு அதிகமானது. எனவே வேறு மாற்றுவழி பற்றிச் சிந்திக்கக் கூடிய நிலையில் அந்த மக்கள் விடப்பட்டிருக்கவுமில்லை.

வடக்கு இராணுவத்தின் தளபதி Yakkubu Gowan ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். ஆனால் கிழக்குப் பிராந்தியத்தின் இராணுவக் கவர்னராக இருந்த Ojukwu மதிய ஆட்சித் தலைவரை ஏற்க மறுத்தார். வடக்கின் அதிகாரம் கிழக்கில் செல்லாது எனப் போர்க் கொடி உயர்த்தினார். ஆக, மக்களுடைய பிளவுகள் ஆட்சியாளர்களது அதிகாரப் போட்டிக்குப் பயன்படுத்தப்பட்டன. இலங்கை அரசியல் இங்கேயும் வேறுபடுகின்றது. எமது போராட்ட வரலாறும் வித்தியாசமான பின்னணியுடையது. ஒற்றுமைகள்-குறைபாடுகள் பிரிவினைக்கான காரணங்களில் இருந்தன என்பது உண்மை. ஆனால் போராட்ட வரலாறு பாதைத் தெளிவுடையது.

புதிய தலைவர் கிழக்குக்கு எதிராக ஏனைய எல்லாக்குழுக்களையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் நான்கு மாநில அரசுகளையும் அகற்றி 12 புதிய அலகுகளை ஏற்படுத்தினார். அதாவது நான்கு பிராந்தியங்களும் ஒவ்வொன்றும் மும்மூன்று அலகுகளாகப் பிரிக்கப்பட்டன. இது புதிய தலைவர் வழங்கிய 'அதிகாரப் பரவலாக்கல்' இதனையும் கிழக்குக் கவர்னர் நிராகரித்து விட்டனர். இறுதியில், கவர்னர் 1967 மே 30 இல் கிழக்குப் பிராந்தியத்தை பயாஃவ்ரா என்ற தனிநாடாகப் பிரகடனப்படுத்தி விட்டார். நாடு புதிய குடியரசு என்றும் வெளிநாடுகள் அதனை அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

### உருக்குலைந்த பயாஃவ்ரா

பயாஃவ்ரா பிறந்த காலதிசை மிகவும் வக்கிரமானதாகும். கெடுபிடிப் போரின் உச்சக் கட்டத்தில் உலகம் மிகவும் மோசமாகப் பிளவுபட்டுக் கொண்டிருந்த காலம். குடியேற்றவாதம் ஆபிரிக்காவில் பொலுபொலுவென உதிர்ந்து கொண்டிருந்த காலம். சுயநிர்ணய உரிமைப் போராட்டம் என்பது குடியேற்ற நாடுகள் விடுதலை பெறுதல் மட்டும் என்றளவுக்கே பொருள் கொள்ளப்பட வேண்டுமென ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் விடாப்பிடியாக வாதிட்டு வந்த காலம். இன்னொரு புறத்தில், இதுதான் 'இறைமை' என ஒவ்வொரு நாடும் தனது ஆள்புலத்தினைப் பொத்திப் பாதுகாத்திட முனைந்து நின்ற காலமும் இதுவே. எனவே பயாஃவ்ராவின் பிறப்பு சுதந்திரம் பெற்ற புதிய நாடுகளுக்கே பலத்த சோதனையாகப் போய்விட்டது. வேறு சில நாடுகளின் சுதந்திரமும் கூட இக்காரணத்தினால் பிற்போடப்பட்டுவிடக் கூடும். எனவே எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது? இதில் ஆபிரிக்க நாடுகள் திண்டாடின. புதிய நாட்டினை அங்கீகரித்தல் என்பது தமக்கு தாமே குழிபறிப்பதாகும் என்பதே இந்த நாடுகளின் சிந்தனை. மறுபுறத்தில் மேற்கு நாடுகளுக்கும் இரு சோசலிஷ முகாம்களும் தமது கருத்தியல் மோதலுக்கும் புதிய நாட்டினை அங்கீகரிக்கும் விடயத்தினைத் தாராளமாகப் பயன்படுத்தின. இத்தனைக்கு மத்தியிலும் ஏறக்குறைய ஒரு வருட காலத்துக்கு பயாஃவ்ரா நிர்வாகம் வெற்றிகரமாகச் செயற்பட்டது. கிழக்குப் பிராந்தியத்தின் பெரும்பாலான பகுதிகள் பயாஃவ்ரா இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன.

→ 11

நன்றி - நூலகத்திட்டம்



# நைஜீரியாவில் நடந்த உள்நாட்டு யுத்தம் .....

ஆனால் ஒரு வருடத்தின் பின் நிலைமை மோசமாகிற்று. உள்நாட்டு யுத்தம் முழு அளவில் வெடித்தது. எப்பாடுபட்டாவது பயாஃவ்ராவை விழுங்கி விடுவதென ஏனைய பகுதிகள் முடிவெடுத்துப் போரில் குதித்தன. பயாஃவ்ராவின் வளங்கள் வரண்டன. பட்டினிச் சாவுகள் குவிந்தன. கொடுமையை மேற்கு நாட்டுப் பத்திரிகைகள் போதிய அளவுக்குப் படம்பிடித்துக் காட்டிய போதிலும் வல்லரசுகளின் மனங்களில் இரக்கத்தை விதைத்திட முடியவில்லை. அரசியற் கொள்கை பேதம் காரணமாகச் சில கண்களை மூடிக்கொண்டன. வேறுசில ஏட்டிக்குப் போட்டியாகக் களத்திலிருந்தன.

எல்லாவற்றையும் விட, பயாஃவ்ராவின் தோல்விக்கு முக்கிய காரணம் அது சோவியத்தைப் பகைத்துக் கொண்டமையேயாகும். சோவியத் யூனியன் இக் காலப்பகுதியில் ஆதரித்த போராட்டங்கள் யாவும் ஆபிரிக்காவில் வெற்றியளித்தன. சோவியத் எதிர்த்த போராட்டங்கள் யாவும் இங்கு தோல்வியில் முடிவடைந்தன. துரதிர்ஷ்டவசமாக, சோவியத் யூனியன் நைஜீரியாவின் மத்திய அரசாங்கத்துக்கு ஆயுதங்களை வாரி வழங்கியது. பயாஃவ்ரா தனக்குச் சீனாவி ஆதரவைத் தேடிக் கொண்டமையே இந்தப் பகைமைக்குக் காரணம். சீனாவின் உதவியை நாடியிரா விட்டால் ஒருவேளை சோவியத் நடுநிலை வகித்திருக்கக் கூடும். சோவியத் கடற்படையினர் நைஜீரியத் துறைமுகங்களுக்கு வந்து சென்றனர். செக்கோஸ்லாவாக்கியா, அல்ஜீரியா, போலந்து என்பவையும் மத்திய அரசுக்கு ஆயுத உதவி வழங்கின. எகிப்திய, கிழக்கு ஜேர்மனி விமானிகள் நைஜீரியாவில் யுத்த விமானங்களை ஓட்டிடவும் சோவியத் வழி செய்தது.

ஆரம்பத்தில் சோவியத், இபோ மக்களின் போராட்டத்தை முற்போக்கானது என ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் பின்பு மத்திய அரசாங்கத்தை முற்போக்கானது என்றும் போராட்டக்காரரைப் பிரிவினைவாதிகள் என்றும் தனது நிலைப்பாட்டை மாற்றிய சோவியத் ஒருபோதுமே போராட்டக்காரரைத் திரிபுவாதிகள் எனக் குறிப்பிட்டதில்லை. புதிய ஆட்சியாளரான Gowan சோவியத் நைஜீரிய உறவுகளைச் சீர்திருத்தியமை ஒரு காரணம் என்றாலும் பூகோள அரசியலே சோவியத்தை மத்திய அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயற்பட வைத்தது என்றும் கூறலாம். சீனா பிரிவினைவாதிகளை ஆதரித்தமை, அமெரிக்காவும், பிரிட்டனும் மத்திய அரசாங்கத்துக்கு உதவ மறுத்தமை ஆகிய நிகழ்வுகள் சோவியத்துக்கு நல்ல நண்பனைத் தரும் அரிய வாய்ப்பை வழங்கி விட்டன.

எதிர்ப்புறத்தில் பயாஃவ்ராவுக்கு பிரான்ஸ், தென்னாபிரிக்கா, சீனா என்பன ஆயுத உதவிகளை வழங்கின. ஆனாலும் பிரான்ஸ் இறுதியில் தடுமாறத் தொடங்கிவிட்டது. பயாஃவ்ராவை அங்கீகரிக்கும்படி பலத்த நெருக்குதல் இருந்த போதும் பிரான்ஸ் பின்வாங்கி விட்டது. பிரான்ஸ் அங்கீகரித்தால் பயாஃவ்ரா மரணித்திருக்காது. பிரிட்டனும், அமெரிக்காவும் நாளடைவில் அங்கீகரிப்பை வழங்க வேண்டி ஏற்பட்டிருக்கும். அரசியல் ஆய்வாளர்கள் பிரான்ஸின் மீதே நம்பிக்கைத் துரோகக் குற்றஞ்சாட்டியுள்ளனர். எட்டத்தில் இருக்கும் 'நண்பர்கள்' எப்போது கைவிடுவார்கள் என்பது நிச்சயமாகக் கூறமுடியாத விடயம். இங்கு பிரான்ஸ் கைகழுவி விட்டது. சீனாவையும் தென்னாபிரிக்காவையும நமபிக களததிலிறங்க ஐரோப்பிய நாடுகள் வேறெதுவும் ஆயத்தமாக இருந்திருக்கவில்லை. உண்மையில் அமெரிக்கா, சோவியத்தும் சீனாவும் மோதுவதைப் பார்த்து ரசிப்பதற்கே ஒதுங்கியிருந்து குளிர்காய்ந்தது.

எட்டத்து நண்பர்களை விடப் பக்கத்துப் பகைவர்களை அனுசரித்துப் போவது நல்லது என்பதும் பயாஃவ்ரா கற்றுத்தரும் பாடமாகும். நான்கு ஆபிரிக்க நாடுகளுக்கும் லத்தீன் அமெரிக்க நாடொன்றும் அங்கீகரித்திருந்தும் கூட ஆபிரிக்க நாடுகளின் கூட்டமைப்பான OAUஎன்பது நாடுகளின் எல்லைக் கோடுகள் மாற்றப்படுவதை அனுமதிப்பதில்லை என்றும் பயாஃவ்ராவை அங்கீகரிப்பதில்லை எனவும் கூறிவிட்டது. இதுவே பயாஃவ்ராவின் மறைவுக்கான முதலாவது பலத்த அடி. அடுத்த கட்டத்தில், சோவியத் தனது நிலைப்பாட்டை மாற்றியதைக் குறிப்பிடலாம். இந்த இரண்டு தவறுதல்களும் சேர்ந்து பயாஃவ்ரா என்ற நாட்டை எண்ணி மூன்றே வருடங்களில் அதாவது 1970 ஜனவரியில் நைஜீரியாவிடம் சரணடைய வைத்துவிட்டன.

## பாடமென்ன?

ஈழப்போரையோ அல்லது வேறெந்தப் பிரிவினைப் போராட்டத்தையோ பயாஃவ்ராப் போருடன் ஒப்பிடுதல் தவறு. நைஜீரியா கண்ட சிவில் யுத்தம் அடிப்படையில் அதிகாரப் போட்டியினால் எழுந்தது. சிறுபான்மையினர் என்பதற்காக அங்குயாரும் கொடுமைப்படுத்தப்படவில்லை. அடக்கப்பட்ட மக்கள் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடத் தொடங்கிப் பிறந்ததுதான் பயாஃவ்ராவும் அல்ல.

சிறுபான்மையினர் கைகளில் அதிகாரம் போய்விடும் என்ற அச்சத்தில் எழுந்த வன்முறையும் இராணுவ ஆட்சியாளர்கள் சமஷ்டி முறைக்குச் சாவுமணி அடித்ததினால் ஏற்பட்ட விளைவுகளுமே அங்கே பிரிவினைக்கு வித்திட்டன. இபோ மக்கள் விரட்டப்படக் காரணம் அவர்கள் சிறுபான்மையினர் என்பதல்ல. சிறுபான்மையினர் தம்மை விழுங்கிவிடுவர் என்ற அச்சமே காரணம். இலங்கையில் தமிழ்மக்கள் பெரும்பான்மையினரை விழுங்கி விடுவர் என்ற அச்சம் பெரும்பான்மையினருக்கு உண்மையில் இருக்கின்றதோ என்னவோ? தமிழர்கள் இரண்டாந்தரப் பிரசைகளாகவே வாழ வேண்டும் என்ற விருப்பு பெரும்பான்மையின அரசியல்வாதிகளிடையே நிறையவே உண்டு. அதாவது சுத்தமான இனவெறி. நைஜீரியா பொருளாதாரக் காரணங்களினால் போரிட முனைந்தது. இலங்கை இனவாதக் கொள்கைக்குப் பொருளாதாரச் சாயமிட்டுப் போரிட முனைகின்றது.

இவற்றுக்கும் மேலாக, ஆய்வாளர்கள் கருத்தில், பயாஃவ்ரா தோல்வி கண்டதால் ஆபிரிக்காவிலுஞ்சரி வேறெந்தப் பிராந்தியத்திலுஞ்சரி பிரிவினைப் போராட்டங்கள் பின்னடைந்ததாக இல்லை. தோல்வியின் தாக்கம் பெரிதளவில் வெளியாரைப் பாதிக்கவில்லை. மறுபக்கத்தில், பங்களாதேஷ் கண்ட வெற்றியே உலகில் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக இவ்வறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

பயாஃவ்ரா தோற்றத்தின் பின்பும் இந்த இராணுவத்திலிருந்த வீரர்களுக்கு முக்கிய பதவிகளை வழங்கி இபோ மக்களை வாஞ்சையுடன் அரவணைத்து கெளசா இனத்தவர் ஆட்சியமைத்ததையும் மேற்கின் யொரூபா இனத்தவரைப் போரின் பின்புறக்கணித்துவிட்டு கிழக்கு மக்களுடன் கெளசா அதிகாரிகள் கூட்டணி அமைத்ததையும் பார்க்கும் போது -இனவாத அடிப்படையில் நைஜீரியா யுத்தங் கண்டதாகக் கூறமுடியாது.

## தாண்டிக்...

றதொரு நிலை அங்கு காணப்படுவதாகவும் தெரியவருகின்றது.

ஜனவரி 15ம் திகதியுடன் விடுதலைப்புலிகளின் தளபதி கிட்டுவும் சகாக்களும் கொல்லப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாவதையிட்டு வடபகுதி எங்கும் ஞாபகார்த்த விழாக்கோல முயற்சிகள் நடைபெறுகின்றன.

அதற்காக தெருநிலம் எங்கும் விளக்கொளி பாச்சுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதனாலோ என்னவோ கால்போத்தல் தேங்காய் எண்ணெய்கூட தாண்டிக்குளத்திற்கப்பால் கொண்டு செல்வதற்கு் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவையும் ஒருபுறமிருக்க கிட்டுவின் நினைவார்த்தக் கொண்டாட்டங்களையொட்டி வடபகுதி களைகட்டுவதனால் சுப்பர்சோனிக், புக்காரா விமானங்கள் சரமாரியாகக் குண்டு வீச்சுகளை நடாத்துகின்றன எனவும், அதனால் மக்கள் விமானங்களின் சத்தங்களைக் கேட்டவுடனேயே சந்து பொந்துகளைத் தேடி ஓடுவதாகவும் அங்கிருந்து வருபவர்கள் கூறுகின்றனர். அண்மையில் கோண்டாவிலில் சனநெருக்கடிமிக்க பகுதியில் போடப்பட்ட குண்டு தற்செயலாக விளையாட்டு மைதானம் ஒன்றில் விழுந்ததனால் ஒரு சிலர் காயங்களுடன் தப்பியுள்ளனர்.

# தொண்டமான்-ஐ.தே.கட்சி

மெய்ப்பித்துக் கொண்டார். இதன் மூலம் இ.தொ,காவின் சக்தியைப் பிரிக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்படுகின்ற பேரினவாத சக்திகளுடனும், பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணைந்து செயற்படுகின்ற தென்னிலங்கை முஸ்லீம் தலைமைகளினதும் எதிபார்ப்புகளை நிறைவேற்றத் தளம் அமைத்துக் கொடுக்கும் முயற்சியில் இவர் இறங்கி விட்டதையே இது காட்டுகின்றது. முறையான ஜனநாயக மரபுகள் பேணப்படாத அமைப்புகளில் அதுவும் தனி மனித சலுகைகளை அடிப்படையாக் கொண்டு அரசியல் நடாத்தும் இ.தொ.கா போன்ற அமைப்புகளில் உள்ளவர்கள் சலுகைகளை நாடி இப்படி செயற்படுவது தவிர்க்கப்படக் கூடிய ஒரு விடயமல்ல.

தொண்டமான்-செல்லச்சாமி பிரிந்திருப்பதோ அல்லது இணைந்து செயற்படுவதோ மலையக மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விடயமல்ல. ஆனால் இ.தொ.கா என்ற மலையக மக்களைக் கொண்ட அமைப்பை இனவாதிகளின் தேவை கருதி பிளக்க உதவுவதானது மலையக மக்களுக்குப் பெரும் பாதகங்களை ஏற்படுத்தக் கூடிய ஒரு செயலாகும்.

மாற்று அரசியல் அமைப்புகள் மலையக மக்களைப் பொறுத்தளவில் இல்லாத சூழ்நிலையில் இ.தொ.காவானது நன்மைகளைச் செய்யாவிட்டாலும் ஒரு அரசியல் சக்தியாக விளங்குவது முக்கியமான ஒரு விடயமாகும்.

இ.தொ.கா-ஐ.தே.கட்சியின் முப்பது வருட உறவின் மூலம் பேரினவாதக் கட்சிகள் ஒரு போதும் சிறுபான்மையினத்தின் உரிமைகளை அங்கீகரிக்காது என்பது ஏற்கனவே உறுதி செய்யப்பட்டு விட்டது. இது அக் கட்சியினதோ அல்லது அதன் தலைமையினதோ குறைபாட்டின் விளைவு அல்ல. அக் கட்சியின் பிரதான கருத்தியல் நிலைப்பாடாக அமைந்துள்ள பேரினவாதத்தின் விளைவாகும் என்பதை நாம் புரிந்து கொள்ளல் வேண்டும். கடந்த முப்பது வருடங்களாக தொண்டமான் ஐ.தே.கட்சியின் இனவாத சுயரூபத்தை மூடிமறைத்து மாற்று வர்ணம் பூச மேற்கொண்ட முயற்சிகளின் விளைவு தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டதாகவே அமைந்தது என்பதைச் சமீபத்தில் இந்தியப் பத்திரிகையான 'இந்து' வுக்கு வழங்கிய பேட்டியிலிருந்து தெரிந்து கொள்ள முடியும்.

எனவே இத்தகைய சூழ்நிலையில் மலையக மக்கள் தாம் இந் நாட்டின் சிறுபான்மையினங்களில் ஒருவர் என்ற அடிப்படையிலும் தமது எதிர்காலப் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளும் விதத்தில் செயற்படுவது ஒன்றே பயனுள்ள நடைமுறையாகும்.

இ.தொ.கா தன் வசப்படுத்தி வைத்திருக்கும் 'வாக்குப் பலமும், ஆட் பலமும், இக் குறிக்கோளை அடைவதற்காகப் பயன்படுத்துவதன் மூலமே வெற்றி காணக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதற்கு இ.தொ.காவை ஜனநாயகமயப்படுத்துவதும், மலையக மக்களின் எதிர்காலம் பற்றிய உறுதியான செயற்திட்டங்களின் அடிப்படையில் செயற்பட வைப்பதுவும் தவிர்க்க முடியாதவைகளாகும்.

இ.தொ.காவின் சக்தியை அதன் உயர் மட்டத் தலைமைகளுக்கு சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவோ அல்லது மலையக மக்களுக்கான இடைக்கால சலுகைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் அவர்களின் எதிர்காலத்தை நாசமாக்குவதற்காகவோ பயன்படுத்தப்படுவதை அனுமதிக்க முடியாது.

இன்று சிறுபான்மையினரின் நலன்களுக்கும், பாதுகாப்பிற்கும் சவாலாக அமைந்துள்ள இனவாதத்தைத் தோற்கடிப்பதற்கும், இந்த நாட்டின் சகல மக்களினதும் இன, மத, மொழிச் சமத்துவத்தை உறுதி செய்யக்கூடிய பல்லினப் பாங்கையும், பல்லின ஜனநாயகத்தையும் உறுதி செய்யக் கூடிய அரசியல் மாற்றத்தை தேசிய ரீதியில் நிலைநாட்டக் கூடிய செயற்திட்டங்களுடன் மலையக மக்களின் சக்தியையும் இணைத்து செயற்படுத்த இ.தொ.கா தலைமைகள் முன்வருவது உறுதி செய்யப்படல் வேண்டும். இதன் மூலமே இந் நாட்டின் ஜனநாயகத் தேவைகளை நிலைநாட்டுவதில் வரலாற்று ரீதியான பங்களிப்புகளை அளித்த பெருமையை இ.தொ.கா பெற்றுக் கொள்ள முடியும். இல்லையேல் பிற்போக்குவாத சலுகைகளுக்கு அடிமையாகும் தலைமைகளைத் தூக்கியெறிந்து விட்டு முறையான ஜனநாயகத் தலைமையை ஏற்படுத்துவது இ.தொ.காவுடன் இணைந்துள்ளவர்களின் தவிர்க்க முடியாத கடமையாக மாறும் என்பதில் ஐயமில்லை.

# 1994ம் ஆண்டை.....

3)ஆசிய பசிபிக் பிராந்தியத்திலிருநது அணு ஆயுதத்தளங்களை அகற்றுதல்.

மணிலா மகாநாட்டில் சில நாடுகள் இனக்குழுக்களுக்கிடையிலான பிரச்சினைகளையும் காணக்கூடியதாயிருந்தது. உதாரணமாக நாகலாந்தைச் சேர்ந்த பூர்வீக குடிப் பெண்கள் இந்தியச் சகோதரிகளால் தமது பிரச்சினைகள் போதுமான அளவு கவனிக்கப்படவில்லை என்றனர். நாகலாந்தின் பிரச்சினைகளின் விசேட அம்சங்கள் வற்புறுத்தப்பட வேண்டும் என்பது அவர்களது கோரிக்கையாக இருந்தது. இந்திய அரசு செலுத்தும் மேலாதிக்கம் போலவே சில இந்தியப் பெண்கள் அமைப்புகளும் மேலாதிக்கத்தன்மை கொண்டனவாகவும் தலித்துகள், சிறுபான்மையினர், பூர்வீக குடிகள் தொடர்பாக அக்கறையற்றும் உள்ளன என்ற ஒரு கருத்தும் காணப்பட்டது. நேபாளப் பெண்களும் தமது குரல் எடுபடாமற் போகிறது என்றனர்.

திபெத்தியப் பெண்களோ தமது பிரச்சினைகள் பற்றிப் பலரது கவனத்தையும் திருப்பும் முயற்சியில் அயராது ஈடுபட்டனர். வெவ்வேறு பயிற்சிப்பட்டறைகளில் அவர்களைக் காணமுடிந்தது திபெத்தில் சீனாவின் அத்துமீறல்கள் பற்றி எடுத்துக்கூறி மனித உரிமைகளைக் கெளரவிக்கும்படி சீனாவுக்கு வேண்டுகோள் விடுத்தனர். திபெத்திய பெண்கள் சங்கத்தின் வேண்டுகோள் மணிலா மகாநாட்டை ஒட்டி ஐந்து நாட்களும் வெளியிடப்பட்ட Towards Beijing'95 (பீகிங்' 95 ஐ நோக்கி) என்ற பத்திரிகையிலும் இடம் பெற்றது. நிர்ப்பந்தமான கருச்சிதைவு, பெருந்தொகையாக மக்களை இடம் பெயர்த்தல், அணுக்கழிவுகளை திபெத்தில் குவித்தல் ஆகியவற்றை நிறுத்துவதற்கு உதவ முன்வருமாறு ஒரு பொது வேண்டுகோளை அது விடுத்தது.

கம்போடியப் பெண்களுக்கு போதியளவு பிரதிநிதித்துவம் தரப்படவில்லை என்ற குறைபாடும் கூறப்பட்டது. நீண்ட காலப் போர்நிலையால் பாதிக்கப்பட்ட கம்பூச்சியாவில் பெண்களுக்கான விசேட பிரச்சினைகள் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும் என்றும் அடுத்த தயாரிப்பு மகாநாட்டிற்கு கம்பூச்சிப் பெண்களை அழைக்க வேண்டும் என்ற பொதுவான் கோரிக்கையும் அமைப்பாளர்களுக்கு விடுக்கப்பட்டது.

மகாநாட்டின் போது மொழிபெயர்ப்பு வசதிகள் வழங்கப்படவில்லை என்பது இன்னோர் குறைபாடு. ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் பல்வேறு மொழி பேசும் மக்கள் உள்ளனர். அப்படியிருக்க ஆங்கிலத்திலேயே முழு மகாநாட்டையும் நடத்துதல் இப் பிராந்தியத்தில் கலாசாரப் பன்மைப்பாட்டை அங்கீகரிக்காத மனோபாவத்தின் பிரதிபலிப்பு என்று கடுமையான விமர்சனமும் எழுந்தது.

இத்தகைய பல்வேறு கருத்துக்களுடனும் வாதப்பிரதிவாதங்களுடனும் இடம்பெற்ற மணிலா மகாநாடு பெரிய அளவில் ஆசிய பசிபிக் பிராந்தியப் பெண்களை் முதன்முறையாக ஒன்றிணைய வைத்தது என்பதால் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பிராந்திய மட்டத்திலான பெண்களது பிரச்சினைகளை இனங்காணவும், அதனை சர்வதேசரீதியாகப் பிரபலப்படுத்தவும், செயற்பாடுகளுக்கு வழிவகுக்கவும் இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வழிவகுக்கும் எனலாம்.

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

# விமானங்கள் தகர்க்கின்றன சாவகச்சேரியை!

## சுப்பர்சோனிக், புக்காராவின் தொடர் குண்டு வீச்சுக்கள். பொதுமக்கள் படுகொலை

தம்பு திருநாவுக்கரசு



கடந்த ஒன்பது வாரங்களாக யாழ் குடாநாட்டில் சாவகச்சேரிப் பகுதியை இலங்கை விமானப்படைப் போர் விமானங்கள் கதிகலங்கச் செய்து வருகின்றன. இந்தக் காலப் பகுதியில் 14 பொதுமக்கள் கொல்லப்பட்டு 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளார்கள். 'சுப்பர்சோனிக்', 'புக்காரா' குண்டு வீச்சு விமானங்களைப் பயன்படுத்தி, பாரிய குண்டுகள்ள வீசியும், கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டும் விமானப் படையினர் நடாத்திய நாலு வெவ்வேறு வான் தாக்குதல் சம்பவங்களினால் புலிகளுக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

'வாடியடி' என்று அழைக்கப்படும் பூநகரிச் சந்தியில் இருந்து சுமார் 25மைல் தொலைவிலுள்ள கௌதாரிமுனை வரை நீண்டு, நாகதேவன் துறை (கடற்படைத் தளம்) வரை பரந்திருந்த கேந்திர முக்கியத்துவம் பெற்ற பூநகரி ராணுவ முகாம் தொகுதியை புலிகள் தாக்கி நிர்மூலமாக்கியதை அடுத்து வெகுண்டெழுந்த அரச படையினர் யாழ் குடாநாட்டின் மீது கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களை மேற்கொண்டார்கள்.

அதற்கு முன்னதாக செப்டெம்பர் 29ம் திகதி ஆனையிறவில் இருந்து ஆரம்பமாகிய 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின் போது சாவகச்சேரிப் பகுதியில் மூர்க்கத்தனமான வான் தாக்குதல்களை விமானப் படையினர் நடாத்தினார்கள். இதனால் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள அரச கட்டிடங்கள், தனியார் கடைக் கட்டிடங்கள், வீடுகள் என்பன நிர்மூலமாகின. பொதுமக்கள் தரப்பில் 30க்கும் மேற்பட்டோர் பலியானார்கள்.


பூநகரியில் புலிகளின் 'தவளைப் பாச்சல்' மற்றும் படையினரின் கிளாலி வரையிலான 'யாழ்தேவி' ஆகிய இரு வேறு பாரிய போர் நடவடிக்கைகளுக்குப் பின்னர், கடந்த நவம்பர் மாதம் 14ம் திகதி தொடக்கம் ஜனவரி மாதம் 5ம் திகதி வரையிலான காலப் பகுதியில் சாவகச்சேரிப் பகுதியில் வான் படையினர் மேற்கொண்டு வரும் தொடர் தாக்குதல்கள் விசேடமானவையென்றே கூற வேண்டும்.


இந்தத தொடர்ச்சியான தாக்குதல்களில் உள்ள விசேடத் தன்மை பற்றி தெரிந்து கொள்வதற்கு முன்னர் இது வரை வெளிவராத இந்தத் தாக்குதல்களின் சேத விபரங்களை முதலில் பார்ப்பது அவசியமாகிறது.

நவம்பர் மாதம் 14ம் திகதி மாலை 5மணியளவில் சாவகச்சேரி வரணிப் பகுதியில் உள்ள குடமியன் என்னும் கிராமத்தில் உள்ள ஆதி வைரவர் கோவிலில் மரத்தடியில் உள்ள விக்கிரகத்திற்கு மூதாட்டி ஒருவர் விளக்கேற்றி வழிபாடு செய்து கொண்டிருந்தார். தீபாவளித் தினத்திற்கு மறுநாளாகிய அன்று கந்த சஷ்டி விரத ஆரம்ப தினமாகையால் உறவினர்கள், ஊரவர் சிலரும் அங்கு கூடியிருந்தனர். வழிபாடுகள் நடந்து கொண்டிருந்த போது, அங்கு பேரிரைச்சலுடன் தோன்றிய சுப்பர் சோனிக் குண்டு வீச்சு விமானம் ஒன்று திடீரென கீழே குத்தி குண்டு ஒன்றை வீசிச் சென்று வானில் வட்டமடித்து மீண்டும் தாழ்ந்து கலிபர் தாக்குதலை அந்தப் பகுதியில் மேற்கொண்டது.

நிர்மாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆதி வைரவர் கோவில் விமானக் குண்டிற்கு இலக்காகி நிர்மூலமாகியது. மரத்தடியில் இருந்த சுமார் இருபது பேரும் பீதி, அதிர்ச்சி காரணமாக உறைந்து போனார்கள் சிதறி ஓடியும், விழுந்து படுத்தும் அதிர்வு காரணமாக வீசி எறியப்பட்டவர்களுமாக 11பேர், இந்தச் சம்பவத்தில் காயமடைந்தார்கள். கலிபர் தாக்குதலுக்கும் குண்டுச் சிதறல்களின் தாக்குதலுக்கும் காயமடைந்தவர்களுடன் இலக்காகிய பனை மரங்கள் சில முறிந்து விழும் அளவிற்கு தாக்கமடைந்தன. கோவிலின் அருகில் இருந்த வீடு ஒன்றும் முற்றாகச் சேதமடைந்தது.

யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட காயமடைந்தவர்களில் ஒருவரான குடமியன் அரசினர் பாடசாலை மாணவன் நல்லையா இளங்குமரன் (9வயது) மூன்றாம் நாள் மரணமானான். ராசாத்தி கனகசிங்கம் என்ற அதே ஊரைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளின் தாயாகிய இருபத்தொரு வயது இளம் பெண் பதின்மூன்றாம் நாள் யாழ் வைத்தியசாலையில் மரணமானாள். ஆதி வைரவருக்கு விளக்கேற்றிய வேளையில் படுகாயமடைந்த மூதாட்டியான இராசம்மா வல்லிபுரம் (61வயது) என்பவர் 20ம் நாள் உயிரிழந்தார். இவர்கள் மூவரும் உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.





இதனை அடுத்து நவம்பர் 20திகதி சாவகச்சேரிப் பகுதியில் மண்டுவில் கிராமத்தில் அம்மன் கோவிலடியில் காலை 6மணியளவில் புக்காரா குண்டுவீச்சு விமானம் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் பெண் ஒருவர் காயமடைந்தார். அம்மன் கோவிலின் அருகில் உள்ள வயல்வெளியில் இந்தக் குண்டு வீழ்ந்து வெடித்து உலோகத் துண்டுகள் தீப்பிளம்புகளாய் சீறிப் பறந்தன. சுமார் கால் மைல் தூரத்தில் வீட்டின் பின்புறத்தில் முகம் கழுவிவிட்டு நிமிர்ந்த வேளை, சீறி வந்த இந்த உலோகத் துண்டுகளில் ஒன்று அந்தப் பெண்ணின் உதடுகளைத் தாக்கிக் காயப்படுத்தியது.

கடந்த டிசம்பர் மாதம் 31ம் திகதி மாலை 5.30 மணியளவில் சாவகச்சேரி சந்தியில் இடம்பெற்ற புலிகளின் முக்கியஸ்தரான காலஞ் சென்ற கிட்டுவின் நினைவாக நினைவுத் தூபி ஒன்றைத் திறந்து வைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுவைபவத்திற்காக கூடியிருந்தோர் மீது புக்காரா விமானம் மேற்கொண்ட கலிபர் தாக்குதலில் 4பொதுமக்கள் ஸ்தலத்திலேயே பலியானார்கள். 55பேர் காயமடைந்தார்கள்.

கிட்டுவின் ஓராண்டு நினைவஞ்சலியையொட்டி ஏற்பாடு செய்திருந்த இந்த வைபவம் அன்று 5.30 மணிக்கு ஆரம்பமாகிய வேளையில் சரியான நேரத்தில் இலக்குத் தவறாமல் வைபவ ஸ்தலத்தில் இந்த விமானக் கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று வீசும் பருவகாலம் இது. முன்னெச்சரிக்கைக்கு இடமில்லாத வகையில் புலிகள் மீது திடீர் தாக்குதலை மேற்கொள்வதற்காக பலாலியில் இருந்து புறப்பட்டது அந்தப் புக்காரா விமானம், கிளிநொச்சி, பரந்தன் பகுதியைச் சுற்றிக் கொண்டு நாவற்குழியை நோக்கி விரைந்து அங்கிருந்து சாவகச்சேரியை நோக்கித் திரும்பி சீறிச் சென்றது. சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியில் மின்னல் வேகத்தில் பதிந்து கலிபர் தாக்குதலை நடாத்தியபடி சாவகச்சேரி சந்தியைக் கடந்து டிறிபேக் கல்லூரிக்கு அருகில் உள்ள கத்தோலிக்கத் தேவாலயம் வரை தாழப் பறந்து உயர்ந்து சென்று மறைந்தது.

சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையில் இந்த விமானத்திலிருந்து சங்கிலித் தொடராகச் சீறிப் பாய்ந்த கலிபர் துப்பாக்கிக் குண்டுகள் மனிதர்களையும் மரம் செடிகள், கடை கட்டிடங்களைத் துளைத்துச் சரித்தன. கத்தோலிக்க தேவாலயம் மிக மோசமாக சேதமடைந்ததுடன் இங்கிருந்த கத்தோலிக்க குருவானவரின் துணைவியாரது இரண்டு கால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார். தேவலாயக் குரு சம்பவ நேரம் வருடஇறுதிச் சமயக் கடமை நிமித்தம் வரணியின் உள்ள வேறோர் ஆலயத்திற்குச் சென்றிருந்தபடியால் இந்த ஆபத்தில்ருந்து தெயவாதீனமாகத் தப்பினார்.

சாவகச்சேரியிலிருந்து டிறிபேக் கல்லூரி இந்த சம்பவத்தில் மூன்றாவது தடவையாக விமானத்தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்தது. கல்லூரி அதிபரின் அலுவலகம், பாடசாலை மண்டபம் என்பனவும் சாவகச்சேரி சிங்கராஜா தனியார் வைத்திய நிலையம், சில கடைகள், வீடுகள் என்பனவும் கலிபர் குண்டுகளால் சேதமடைந்தன.

காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிப்பட்ட 55பேரில் 6 பேர் அடுத்தடுத்த தினங்களில் உயிரிழந்தார்கள். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 10ஆக உயர்ந்துள்ளது. சாவகச்சேரியின் பிரபல மருந்துக் கடை உரிமையாளராகிய நமசிவாயம் என்பவர் உட்பட வேறுபலரும் ஆபத்தான நிலையில் தொடர்ந்தும் யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார்கள்.

குண்டுவீச்சு விமானமொன்று குண்டுத் தாக்குதலை நடாத்தாமல் துணிகரமாக யாழ் குடாநாட்டில் கலிபர் தாக்குதல்லை மேற்கொண்டது இதுவே முதற்தடவையாகும் என்று ஊர்வாசிகள் தெரிவிக்கின்றனர்.

கிட்டுவின் நினைவஞ்சலி வைபவத்தில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டவிடத்தும் வைபவப் பந்தலில் குறைந்த எண்ணிக்கையானோரே பாதுகாப்பு வரிசைக் கிரமத்தில் அனுமதிக்கப்பட்டு இருந்தமையினால் பெரியளவிலான உயிர்ச்சேதங்கள் இன்றி பலர் தெய்வாதீனமாக தப்பினார்கள். எனினும் அங்கு குழுமியிருந்த புலிகளின் காவல்துறையினர், புலிப் பிரமுகர்களுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நான்கு தினங்களின் பின்னர் ஜனவரி 5ம் திகதி கெருடாவிலில் சுப்பர்சோனிக் விமானம் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் சிறுமி ஒருவர் காயமடைந்தார். ஆயினும் செவிப்பறையைத் துளைக்கும் வகையில் பேரிரைச்சலோடு வந்து மீசாலைப்பகுதியில் பதிந்த இந்த சுப்பர்சோனிக் குண்டு வீச்சு விமானம் தந்த அதிர்ச்சியில் மீசாலையைச் சேர்ந்த சிற்றம்பலம் என்பவர் மாண்டு போனார். (அதே தினம் தாவடியில் மேற்கொள்ளப்பட்ட பிறிதொரு விமானக் குண்டுவீச்சுச் சம்பவத்தில் நான்கு பொதுமக்கள் பலியானார்கள்).

பூநகரி இராணுவ முகாம் மீதான துணிகரத் தாக்குதல் நடவடிக்கைகளில் காயமடைந்து வேறுசில புலி உறுப்பினர்களோடு, புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தாராம். அந்த வேளையில் பொட்டம்மானையும் ஏனையோரையும் குறி வைத்து விமானப் படையினர் யாழ் ஆஸ்பத்திரி மீது நடாத்திய குண்டுத் தாக்குதலே இலக்குத் தவறி மணிக்கூட்டு வீதியில் விழுந்ததாகக் கூறப்படுகின்றது. ராணுவத்தினருக்கு பொட்டம்மான் பற்றி உளவு பார்த்துத் தகவல் தெரிவித்துக் காட்டிக் கொடுத்தாக்க் கூறப்படும் ஒருவரைப் புலிகள் வோக்கிடோக்கியோடு கைப்பற்றி மரண தண்டனை அளித்துள்ளார்கள். இவரோடு சேர்த்து எதிரிக்கு உளவு பார்த்துத் தகவல் தெரிவித்தார் எனக் கூறி வேறு எட்டுப் பேருக்கும் அண்மையில் புலிகள் பகிரங்க மரணதண்டனை வழங்கியுள்ளார்கள்.

தேர்தல் ஆண்டாக ஜனாதிபதி விஜயதுங்கவினால் அறிவிக்கப்பட்டுள்ள 1994ம் ஆண்டின் தொடக்கத்திலேயே பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான வழிமுறைகளை தூக்கியெறிந்து விட்டு பிடிவாதப் போக்குடன் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒருவரை ஒருவர் மூர்க்கமாகத் தாக்கி எதிரிக்குப் பேரிழப்பை ஏற்படுத்துவதற்கான சரியான தளங்களைத் தேர்வு செய்வதுடன் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருவதையே காணமுடிகின்றது. மொத்தத்தில் பாரிய மோதல்களுக்கும் கூடிய அழிவுகளுக்கும் கட்டியம் கூறி நிற்கும் இப் புதிய ஆண்டில் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அமைதியும், சமாதானமும் தலைகாட்டுமா என்பது சந்தேகமே.

[redacted]

சரிநிகர் மாதமிருமுறை இதழ் இல. 18/2 அலோ சாலை, கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்